# இலங்கையின் மாற்றுக் கருத்துக்கான ஒடுக்குமுறை

ஏப்பிரல் 01 - யூன் 30, 2019




எழுத்தாளர் 'சக்திக்க சத்குமார' கைது செய்யப்பட்டு 3 மாதங்களுக்கும் அதிகமான காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.அவரை விடுவிக்கக்கோரி யூன் 17ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட இயக்கம்

– Photo courtsey - madyawediya.lk

INFORM Human Rights Documentation Centre
www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

இலங்கையின் மாற்றுக்கருத்துக்களை ஒடுக்குதல் ; 2019, ஏப்பிரல் 1-யூன் 31

© இன்ஃபோர்ம் மனித உரிமைகளுக்கான தரவு மையம், 2019

கொழும்பு, இலங்கை

**<u>உள்ளடக்கம்</u>**

**A. ஒன்றுகூடும் மற்றும் ஸ்தபான ரீதியாக அணிதிரளும் சுதந்திரம்**

**B. கருத்துச் சுதந்திரம்**

**C. ஒடுக்குமுறைச் சட்டங்கள்**

**D. பிற (ஏனையவை)**

*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990இல் இன்ஃபோர்ம் (INFORM) நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது .குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது .உள்ளூர் ,தேசிய ,சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும் ,அறிக்கைகளை வெளியிடுவதிலும் ,அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது .படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைக் காப்பாளர்களை மையப்படுத்தியும் 'இன்ஃபோர்ம்' தன்னை ஈடுபடுத்தி வருகின்றது . இலங்கையில் கொழும்பை மையமாகக்கொண்டு 'இன்ஃபோர்ம்' இயங்கி வருவதோடு ,உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும் ,பிராந்திய - ஆசிய - சர்வதேச மனித உரிமைகள்*

# உள்ளடக்கம்

**வழிமுறை** .......... **4**

**I. முறைமையியல்** .......... **4**

**II. சம்பவங்களின் உள்ளடக்கம்** .......... **5**

**III. நிறைவேற்றுச் சாராம்சம்** .......... **8**

**IV. சம்பவங்களின் பட்டியல்** .......... **11**

**A. ஒன்றுகூடும் மற்றும் ஸ்தபான ரீதியாக அணிதிரளும் சுதந்திரம்** .......... **14**

1. மே 18 ஆந் திகதி நினைவேந்தலில் பங்குபற்றிய யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு அச்சுறுத்தல் .......... 14
2. கொழும்பின் பெருமிதம் (Colombo Pride) சவால்களுக்கிடையே இடம்பெற்றது .......... 15
3. இல்மனைட் கைத்தொழிற்சாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த நால்வர் கைது .......... 15
4. வவுனியாவின் சமூக செயற்பாட்டாளரிடம் குறுக்கு விசாரணை .......... 16
5. மன்னார் சிவில்சமூக அமைப்பொன்று இராணுவத்தினரால் சுற்றி வளைப்பு .......... 16
6. ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தத்திற்கு எதிரான விசாரணை .......... 16

**B. கருத்துச் சுதந்திரம்** .......... **17**

7. வெசாக் அலங்காரங்களைப் படம் பிடித்த காரணத்தினால் மூன்று இளைஞர் கைது .......... 17
8. யாழ்.பொலிஸார் கறுப்புக்கொடி ஏற்றுதலை தடைசெய்தனர் .......... 17
9. முல்லைத்தீவில் தமிழ் ஊடகவியலாளருக்கு எதிராக பொலிஸார் தாக்குதல் .......... 17
10. செய்தி சேகரிக்கச் சென்ற ரொய்ட்டர் ஊடகவியலாளர் விளக்கமறியலில் .......... 18
11. முல்லைத்தீவில் தமிழ் கார்டியன் ஊடகவியலாளர் கைது .......... 19
12. ஊடகவியலாளர் மொஹொமட் ரிஸ்வி மஹரூப் கைதுசெய்யப்பட்டார் .......... 20
13. தினகரன் பத்திரிகையின் ஊடகவியலாளர் கைதுசெய்யப்பட்டார் .......... 21
14. ஊடகவியலாளர் அஸாம் அமீனுக்கு எதிராக பொய்க்குற்றச்சாட்டுக்கள் .......... 21
15. தீபானி டி சில்வாவுக்கு எதிரான பொய்க் குற்றச்சாட்டுக்கள் .......... 22
16. தன்னிச்சையாகச் செயற்படுபவர் (தடப்பரயா) பத்திரிகை ஆசிரியரிடமிருந்து வாக்குமூலத்தைப் பெறுகிறார்! .......... 23

17. சக்தி கசத் குமார கைதுசெய்யப்படுதல் ........ 24

18. ஊடகவியலாளர் குசல் பெரேராவை கைதுசெய்வதற்கான முயற்சி ........ 25

**C. அடக்குமுறைச் சட்டங்கள் ........ 26**

19. ICCPR சட்டத்தைக் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்குப் பயன்படுத்துதல் ........ 26

20. அவசரகாலச் சட்ட பிரகடனமும் உரிமைகளுக்கான மட்டுப்பாடும் ........ 27

21. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை (CTA) மீண்டும்கொண்டு வருவதற்கான முயற்சி ........ 28

**D. பிற (ஏனையவை) ........ 29**

22. யாழ்.பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவரும் செயலாளரும் பொலிஸாரினால் கைது ........ 29

23. மஹா நாயக்க தேரரின் பகைமை உணர்ச்சியைத் தூண்டக்கூடிய கூற்றுக்கள் தொடர்பாக முறைப்பாடு செய்த கலாநிதி சரவணமுத்துவிற்கு எதிராக பிக்குமாரின் முறைப்பாடு ........ 30

24. பொலிஸ் உத்தியோகத்தரை ஒருபௌத்த பிக்கு மிரட்டினார் ........ 31

25.அகதிகளும் மனித உரிமைக் காவலர்களும் மனித உரிமைப்பாதுகாப்பு அமைப்புக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ........ 31

# வழிமுறை


## I. முறைமையியல்

2019 ஏப்ரல் 1இலிருந்து ஜூன் 30 வரை இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை தொடர்பான சில குறிப்பிடத்தக்க சம்பவங்களின் சில பொதுவான போக்குகளையும் மற்றும் விபரங்களையும் இந்த அறிக்கை வழங்குகின்றது. இது பிரதானமாக பிரதான நீரோட்டத்திலும் மற்றும் சமூக ஊடகங்களிலும் அறிக்கையிடப்பட்ட தகவல் மீதான அடிப்படையைக் கொண்டுள்ளது. எனினும், சில விடயங்களில் தாபனங்களுடனும், பின்வாழுபவர்களுடனும் INFORM பணியாளர்கள் நடத்திய நேரடியான நேர்முகங்காணல்களிலிருந்து அல்லது கலந்துரையாடல்களிலிருந்து தகவல் திரட்டப்பட்டது. இந்த அறிக்கையில், குறிப்பிடப்பட்டுள்ள அடக்குமுறையின் சம்பவங்கள் மனித உரிமைகள் காப்பாளர்களின் கைதுகள், புலனாய்வுகள் போன்ற உண்மையான அச்சுறுத்தல்களையும் அத்துடன் எதிர்காலத்தில் மனித உரிமைகள் காப்பாளர்களின் சுதந்திரங்களினதும், பாதுகாப்பினதும் மீது மறுதலையிலான தாக்கமொன்றைக் கொண்டிருக்கக்கூடிய புதிய அடக்குமுறை சட்டங்களையும் உள்ளடக்குகின்றன.

இந்த அறிக்கையில், ஏனையவை மத்தியில் பொலிஸ், ஆயுதப்படைகள், மதக்குழுக்கள் ஆகியன மற்றும் அரசியல்வாதிகள் உட்பட அரசாங்க அல்லது அரசாங்கச் சார்பற்ற சாதனங்களின் கைகளில் உரிமைகளின் மீறல்களையும், சமூக அநீதியையும் பதிவுசெய்வதற்கு எதிரான அல்லது முயற்சிப்பதற்கான போராட்டத்தின், அதைத் தடுப்பதன், எதிர்ப்பதன், சவால்விடுப்பதன் செயற்பாடுகள் "கருத்து வேறுபாடு" என பரந்தரீதியில் வரையறுக்கப்படுகின்றன. மேற்படி கருத்து வேறுபாட்டின் செயற்பாடுகளை அடக்குவதற்கு அரசாங்க அல்லது அரசாங்கச் சார்பற்ற செயற்பாட்டாளர்களினால் ஏதேனும் முயற்சியாக "அடக்குமுறை" வரையறுக்கப்படுகின்றது. ஏதேனும் வாக்குவன்மையிலான நிந்திக்கின்ற மனித உரிமைகளும் உரிமைகளை ஒழிப்பதற்கான அதன் ஆற்றலளவின் காரணமாக கருத்து வேறுபாட்டின் அடக்குமுறையாகக் கருதப்படுகின்றன.

சம்பவங்களின் உள்ளடக்கத்தின் கீழ், சம்பவங்களினதும், பாதிக்கப்பட்டவர்களின் பால்நிலையினதும், அடக்குமுறையின் வகுதிகளினதும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களினதும் புவியியல்சார்ந்த விரிவாக்கம் மீது புள்ளிவிபரப் பகுப்பாய்வொன்று வழங்கப்பட்டுள்ளது. இந்தப் போக்குகளின் சூழமைவினைச் சாராம்சம் விபரிப்பதுடன், அரசாங்க மற்றும் வேறு தரப்புக்களின் நடத்தை தொடர்பில் சம்பவங்களையும், சில பொதுவான முடிவுகளையும் பகுப்பாய்கின்றது. ஊடகங்களின் அறிக்கைகள், சமூக ஊடகங்கள், INFORMக்கு அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் INFORM பணியாளர்களின் அவதானிப்புகள் மற்றும் அனுபவம் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட சம்பவங்களின் பட்டியலொன்றை INFORM பராமரிக்கின்றது.


## II. சம்பவங்களின் உள்ளடக்கம்




உருபு 1: சம்பவங்களின் புவியியல்சார்ந்த உள்ளடக்கம்


அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சம்பவங்களின் புவியியல்சார்ந்த உள்ளடக்கத்தைக் கரிசனைக்கு எடுக்கும் போது, கொழும்பு மாவட்டத்திலிருந்தே தனித்த ஒரு மாவட்டத்திலிருந்து சம்பவங்களின் ஆகக்கூடுதலான சதவீதம் (32%) அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும், சம்பவங்களின் 32%ஆனது வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் அறிக்கையிடப்பட்டுள்ளது. இவை யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து 3 சம்பவங்கள், மன்னார் மாவட்டத்திலிருந்து 1, வவுனியா மாவட்டத்திலிருந்து 1, முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 2 மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 1 என உள்ளடக்குகின்றன. ஏனைய மாவட்டங்களிலிருந்து 20% சம்பவங்கள் மட்டுமே அறிக்கையிடப்பட்டுள்ளன. இவை கம்பஹா மாவட்டத்திலிருந்து 2 சம்பவங்கள், இரத்தினபுரி, அனுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலிருந்து ஒவ்வொன்றும் 1 சம்பவம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. ஒரு சம்பவத்தில், சம்பவத்தின் மாவட்டத்தை எம்மால் கண்டறிய முடியவில்லை. அடக்குமுறைசார் சட்டங்களின் தாக்கம் தேசியரீதியில் தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்பதனால், அவற்றின் புவியியலசார்ந்த அமைவிடம் பொருத்தமானதல்ல எனக் கருதப்பட்டது, முன்னைய காலாண்டுடன் ஒப்பிடும் போது, வடக்குக்கும், கிழக்குக்கும் வெளியே அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை இந்தக் காலாண்டில் அவதானிக்க முடியும்.

25 சம்பவங்களில் ஒரு சம்பவம் மட்டுமே பிரத்தியேகமாக பெண் பாதிக்கப்பட்டவர் ஒருவர் தொடர்பானதாகும். 12 சம்பவங்கள் ஆண் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பானவையாகும். அதேவேளை, ஏனைய சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களின் பால்நிலை ஒன்றில் குறிப்பிடப்படவில்லை அல்லது பொருத்தமற்றது. ஏனெனில் பாதிக்கப்பட்ட தரப்புக்கள் குழுக்களாக, தாபனங்களாக விளங்கின.




உருபு 2 – அடக்குமுறையின் வகுதிகள்

பெரும்பான்மையிலான சம்பவங்களில் 32%ஆனவை கருத்து வேறுபாட்டினைக் கொண்டிருப்பவர்களின் கைது தொடர்பானவையாகும். இதில் 16% கொண்டவை பாதுகாப்புப் படைகளினாலும், பொலிஸினாலும் கருத்து வேறுபாட்டினைக் கொண்டிருந்தவர்கள் குறித்து நடைமுறையிலான புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள் தொடர்பானவையாகும். மனித உரிமைகள் தாபனங்கள் மீதான திடீர் வேட்டைகள் மற்றும் தேடுதல்கள் ஆகியவை தொடர்பாக 8% விளங்குகின்றது. சம்பவங்களின் இன்னொரு 8%ஆனது வெறுப்பு உரை தொடர்பானதாகும். 12% கொண்ட சம்பவங்கள் அடக்குமுறையிலான சட்டங்கள் தொடர்பானவையாகும். உடல்ரீதியிலான தாக்குதல் தொடர்பில் ஒரு சம்பவம் (4%) இருந்தது.




உருபு 3 – பாதிக்கப்பட்டவர்களின் வகுதி

இதழியலாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் ஆகியோரின் அடக்குமுறை தொடர்பில் பெரும்பாலான சம்பவங்கள் - 40% இடம்பெற்றுள்ளன. 8% கொண்ட சம்பவங்கள் மாணவ செயலார்வலர்களின் அடக்குமுறை தொடர்பானவையாகும். ஒரு சம்பவம் பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு எதிராகச் செய்யப்பட்ட அச்சுறுத்தலொன்று தொடர்பானதாகும். 24% கொண்ட சம்பவங்கள் வேறு செயற்பாடுகள் தொடர்பானவை என்பதுடன், வேறு சிவிலியன்களின் உரிமைகளினதும், சுதந்திரங்களினதும் அடக்குமுறை தொடர்பில் 12%ஆனவை விளங்குகின்றன. சுரங்கமறுத்தல் நிறுவனமொன்றுக்கு எதிரான எதிர்ப்பாளர்களையும், வெசாக் கொண்டாட்டங்களைப் புகைப்படமெடுத்தமைக்காக கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களையும் மற்றும் கறுத்த கொடிகளை ஏற்றுவதற்கு தடைசெய்யப்பட்ட சிவிலியன்களையும் வேறு சிவிலியன்கள் என்ற கருத்து கொண்டுள்ளது.

## III.நிறைவேற்றுச் சாராம்சம்

2019 ஏப்ரல் 21 அன்று, இஸ்லாமிய பயங்கரவாதக் குழுவொன்றினால் கொழும்பிலும், மட்டக்களப்பிலும் 3 தேவாலயங்களையும் அத்துடன் கொழும்பில் 3 பாரிய சுற்றுலாப்பயண ஹொட்டல்களையும் ஒரு தொடரிலான குண்டு தாக்குதல்கள் இலக்குப்படுத்தின. குண்டுத்தாக்குதல்களினால் 253 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து, நாடு பூராவும் அவசரகால ஒழுங்குவிதிகள் பிரகடனப்படுத்தப்பட்டன. இது தொடர்பில், இஸ்லாமியவாதிகளும், இனத்துவதேசியவாதக் குழுக்களும் அதிகளவு பிரபல்யத்தையும், ஏற்றுக்கொள்ளலையும் பெற்றதுடன், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம்களினால் முகங்கொடுக்கப்பட்ட பழிவாங்குதல் பற்றிப் பேசிய இதழியலாளர்களும், கலைஞர்களும் சமூக ஊடகங்களில் வெறுப்பு உரையினால் முறைமையானரீதியில் இலக்குப்படுத்தப்பட்டனர். தமது பணியைச் செய்யும் வேளையிலும், தமது வீட்டில் இருந்த வேளையிலும் பயங்கரவாதம் தொடர்பிலான குற்றங்கள் குறித்து சந்தேகத்தின் மீது குறைந்தபட்ச 3 இதழியிலாளர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணை மீது விடுவிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

பெருமளவு ஆண்டுகளாக அவதானிக்கத்தக்க போக்கொன்றாக விளங்கும் பௌத்த தேசியவாதத்திற்கு எதிராக கருத்து வேறுபாட்டினைக் கொண்டிருந்த எழுத்தாளர்களின் அடக்குமுறையும் இந்த 3 மாதங்களின் போது தீவிரமடைந்தது. பௌத்த மதம் குறித்து விமர்சிக்கும் விதத்தில் சிறுகதையொன்றை எழுதியமைக்காக சிங்கள எழுத்தாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து 'சிங்கள பௌத்த வன்முறை' பற்றி கட்டுரையொன்றை எழுதிய பின்னர் இதழியலாளர் ஒருவர் கைது செய்யப்படவிருந்தார். அத்துடன் புத்தக அறிமுக விழாவொன்றில் உரையொன்றை நிகழ்த்திய பின்னர் "பௌத்தத்தை நிந்தித்ததுடன், வெறுப்பினைப் பரப்பினார்" என்ற சார்த்துரைக்காக ஊடக நிறுவனத்தின் உரிமையாளர் ஒருவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் பொது நிகழ்ச்சியொன்றில் இன்னொரு சிரேஷ்ட பௌத்த மதகுருவினால் ஆற்றப்பட்ட வெறுப்பு உரைக்கருத்துக்கள் குறித்து விசாரணையொன்றை நடத்துமாறு பொலிஸை கேட்டுக்கொண்ட மனித உரிமைகள் காப்பாளர் ஒருவருக்கு எதிராக முறைப்பாடொன்று செய்யப்பட்டது. 2013இல் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் கூட்டமொன்றைக் குழப்பியதிலிருந்து பகிரங்கமாக அறியப்பட்ட பௌத்த மத குருமார்களின் தீவிரவாதக் குழுவொன்றாக விளங்கும் பௌத்த தகவல் நிலையத்தினால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பானவையே இந்த நிகழ்ச்சிகளின் பெரும்பாலானவையாகும்.

இக்காலத்தின் போதும் அத்துடன் பெருமளவு ஆண்டுகளாக ஒரு தொடர்ச்சியான பாங்கொன்றாகவும் வடக்கு-கிழக்கில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை அவதானிக்கப்பட்டது. யுத்தத்தின் முடிவுக்காக நினைவுகூரல் வைபவங்களை ஒழுங்குசெய்தமைக்காக தமிழ் மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டனர். சர்ச்சைக்குரிய பௌத்த ஆலயம் தொடர்பில் வழங்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையொன்றின் அமுலாக்கம் மீது அறிக்கையிடுவதற்குச் சென்ற இதழியலாளர் ஒருவர் பொலிஸ் அலுவலர் ஒருவரினால் தாக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. காணாமலாக்கப்பட்டவர்களின்

குடும்பங்களினாலான போராட்டமொன்றின் போது புலனாய்வு முகவர்களினால் அச்சுறுத்தலை வெளிப்படுத்திய இன்னொரு இதழியலாளரும் கைது செய்யப்பட்டார். மேலும், வடக்கிலும், கிழக்கிலும் சிவில் சமூகத் தாபனமொன்றின் அலுவலகம் மீது இராணுவத்தினால் திடீர் வேட்டை நடத்தப்பட்டது. சந்தேகத்திற்குரிய எதுவும் காணப்படாத போதிலும், தாபனத்தின் பணியாளரை இராணுவம் வாய்மொழியாகத் தூஷித்தது. காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களினால் நீண்ட காலப் போராட்டமொன்றில் நீண்ட காலம் சம்பந்தப்பட்டிருந்த தமிழ் காணாமலாக்கப்படலை எதிர்க்கும் செயலார்வலர் ஒருவர் புலன் விசாரணை செய்யப்பட்டார். தொழிற்சாலையொன்றினால் காணி கையடக்கப்பட்டதற்கு எதிரான போராட்டம் நடத்தியவர்களும் கைது செய்யப்பட்டதுடன், காணாமலாக்கப்படலை எதிர்க்கும் செயற்பாட்டாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

ஆடை, புகைப்படங்கள் போன்ற வெளிப்படுத்தலின் (பொது இடங்களில்) எளிய வடிவங்கள் கூட கைதுக்கு இட்டுச்சென்ற அதேவேளை, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவதற்கு கறுத்தக் கொடிகளை ஏற்றுவதை நிறுத்துவதற்கு பொலிஸ் முயற்சித்தது.

மேலும், பாரபட்சத்திலானதும், ஊறுபடத்தக்கதுமான சனசமூகங்கள், விசேடமாக LGBTIQ சனசமூகத்தினர், அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் அத்துடன் முஸ்லிம் பெண்கள் பாரபட்சத்தினதும், தொந்தரவின் இலக்குகளாக விளங்கினர். LGBTIQ தாபனமொன்றினால் வருடாந்த பெருமை நிகழ்வு கஷ்டங்களுக்கு முகங்கொடுத்தது. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களின் பின்னர், தமது வாழிடத்திலிருந்து வெளியேறுவதற்கு அகதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன், அவர்களில் சிலர் கும்பல்களினால் அச்சுறுத்தப்பட்டு, தாக்கப்பட்டனர். அகதிகளுடன் பணியாற்றும் தாபனங்கள் இராணுவத்தினாலும், பொலிஸினாலும் அதிகரித்த கண்காணிப்புக்கும், தேடுதல்களுக்கும் முகங்கொடுத்த அதேவேளை, அகதிகளுக்கு ஆதரவையும், பாதுகாப்பினையும் வழங்குகின்ற மனித உரிமைக் காப்பாளர் ஒருவர் தாக்குதலுக்கும், தாக்குதலின் அச்சுறுத்தலுக்கும் முகங்கொடுத்தார். அவசரகாலநிலைச் சட்டங்களின் கீழ் முகத்தை மூடும் தடை (ஹிஜாப் மற்றும் நிகாப் உட்பட) சுமத்தப்பட்ட பின்னர் தடைசெய்யப்படாத ஆடைகளை அணியாதவர்கள் உட்பட முஸ்லிம் பெண்கள் பொது இடங்களில் தொந்தரவு செய்யப்பட்டதுடன், அவர்கள் மீது அவசரகாலச் சட்டங்கள் பாரபட்சமின்றி பயன்படுத்தப்பட்டன. இது குறித்து ஒரு தொகையிலான விசாரணைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டது.[1] இன்னொரு

---

[1] [1]முஸ்லிம் பெண்களினாலும் மற்றும் வேறு முஸ்லிம்களினாலும் முகங்கொடுக்கப்பட்ட பாரபட்சத்தினதும், தொந்தரவினதும் இந்தச் சம்பவங்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. HRCSLஇன் தலையீடுகள் பற்றிய மேலும் விபரங்கள் பின்வரும் இணைப்புக்களில் அடையப்பட முடியும்:

வழக்கறிஞர்களின் பாரபட்சத்திலான நடைமுறைகள் மீது இலங்கை வழக்கறிஞர் சங்கத்திற்கு HRCSLஇனால் எழுதப்பட்ட கடிதம் http://hrcsl.lk/english/wp-content/uploads/2019/06/HRCSL-letter-to-Bar-Association-of-Sri-Lanka.pdf

ஆடை நியதி மீது அண்மைய சுற்றறிக்கை மீது அரசாங்க நிருவாக அமைச்சுக்கு HRCSL எழுதுகிறது http://hrcsl.lk/english/2019/06/04/hrcsl-writes-to-ministry-of-public-administration-on-recent-circular-on-dress-code/

உயர் கல்வி நிறுவனங்களில் பாரபட்சமின்மையை உறுதிப்படுத்துவதற்கான அவசியம் மீது பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு HRCSL எழுதுகிறது http://hrcsl.lk/english/2019/05/25/hrcsl-writes-to-chairman-university-grants-commission-on-need-to-ensure-non-discrimination-in-institutions-of-higher-education/

விடயத்தில், இனத்துவச் சுத்திகரிப்பின் செயற்பாடொன்றுக்காக முஸ்லிம் மருத்துவ வைத்தியர் ஒருவருக்கு எதிராக ஆதரவளிக்காததிற்காக சி.ஐ.டி. தொடர்பான பொலிஸ் அலுவலர் ஒருவர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக விளங்கும் பௌத்த மதகுரு ஒருவரினால் நீதவான் நீதிமன்றமொன்றில் அச்சுறுத்தப்பட்டார். இவ்விடயத்தில், சிங்களப் பெண்கள் மீதான சிசேரியன் குழந்தை பிறப்பு சத்திரசிகிச்சைகளின் போது அவர்களது சம்மதம் இன்றி அவர்கள் மீது கருத்தடையை மேற்கொண்டதாக அவரைக் குற்றஞ்சாட்டி தேசியச் சிங்கள செய்திப்பத்திரிகையொன்று வெளியிட்ட கட்டுரையொன்றின் பின்னர் முஸ்லிம் மருத்துவ வைத்தியர் கைது செய்யப்பட்டார். அத்துடன் சட்டவிரோதமான அல்லது சந்தேகமான வழிவகைகளின் ஊடாக சொத்துக்களைச் சம்பாதித்தார் எனவும் அவர் குற்றஞ்சுமத்தப்பட்டார். விசாரணைகளின் பின்னர், இந்த சார்த்துரைகளுக்கு எதிராக சான்று இல்லை என நீதிமன்றத்திற்கு குற்றவியல் விசாரணைகள் பிரிவு (சி.ஐ.டி.) அறிவித்தது[2].

அத்துடன், ரயில்வே தொழிலாளர்கள் தொடர்பான வேலைநிறுத்தமொன்றை ஒழுங்குசெய்தவர்களுக்கு எதிராக பொலிஸார் விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளதாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. 'அவசரகால ஒழுங்குவிதிகளின்' கீழ், தேயிலை, தெங்கு, இறப்பர், புடவை ஆகியன உட்பட பலதரப்பட்ட சேவைகளுக்கும், கைத்தொழில்களுக்கும் தொழிலாளர் வேலைநிறுத்தங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. எழுத்தாளர்களினதும், இதழியலாளர்களினதும் மற்றும் சிவிலியன்களினதும் கருத்துச் சுதந்திரத்தை அடக்குவதற்கு 2007இன் சர்வதேச சிவில், அரசியல் உரிமைகள் மீதான ஒப்பந்தத்தின் 54ஆம் இலக்கத்தை தப்பாகப் பயன்படுத்துவது இன்னொரு போக்காகும். அத்துடன் சிவில் சமூகம், எதிரணி அரசியல் கட்சிகள் மற்றும் ஊடகத் தாபனங்கள் ஆகியவற்றிலிருந்து பலமான எதிர்ப்பின் காரணமாக அரசாங்கத்தினால் ஏற்கனவே தற்காலிகமாக மீளப்பெறப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்படும் என பிரதமர் பெருமளவு தடவைகள் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து, நீண்ட கால மனித உரிமைகள் போராட்டங்கள் நிலைத்திருப்பதற்கு கஷ்டப்பட்டதுடன், குறைந்தளவில் கண்கூடானதாகவும் விளங்கியது. அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் கட்டுப்படுத்தப்படலாம் என்பதனால், ஒழுங்குபடுவதிலும், போராட்டங்களுக்கு பகிரங்க ஆதரவைக் கொண்டிருப்பதிலும் செயலார்வலர்களும், சிவில் சமூகத் தாபனங்களைச் சேர்ந்தவர்களும் கஷ்டங்களுக்கு முகங்கொடுத்தனர். பாதுகாப்பினை முன்னுரிமைப்படுத்திய அரசாங்கத்தின் முக்கியத்துவம் ஊடக மற்றும் பொது கருத்தாடலினால் அதிகரித்தளவில் முனைவுபடுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, மனித உரிமைகள் மீதான நோக்கு குறைந்தளவில் முக்கியமானதாக விளங்கியது. இச் சூழ்நிலையானது இலங்கையில் மனித உரிமைகள் சூழ்நிலை மீது நீண்ட கால மறுதலையிலான தாக்கமொன்றைக் கொண்டிருக்கலாம்.

---

பாதுகாப்பு நடைமுறைகளை வினைப்படுத்துவதில் பாரபட்சமின்மையைக் கோரி வர்த்தகச் சபைக்கு HRCSL எழுதுகிறது. http://hrcsl.lk/english/2019/05/24/hrcsl-writes-to-chambers-of-commerce-requesting-non-discrimination-in-enforcing-security-measures/

பாதுகாப்பு நடைமுறைகளை வினைப்படுத்துவதில் பாரபட்சமின்மையைக் கோரி அரசாங்க அதிகாரசபைகளுக்கு HRCSL எழுதுகிறது. http://hrcsl.lk/english/2019/05/24/hrcsl-writes-to-public-authorities-calling-for-non-discrimination-in-enforcing-security-measures/

[2] [2]வைத்திய கலாநிதி ஷாபி சிகாப்டீனுக்கு எதிரான சகல சார்த்துரைகளுக்கும் சான்று கண்டறியப்படவில்லை என நீதிமன்றத்திற்கு சி.ஐ.டி. அறிவிக்கின்றது

## IV. சம்பவங்களின் பட்டியல்

| | திகதி | அமைவிடம் | விபரம் | ஆதாரம் |
|---|---|---|---|---|
| (A) | ஒன்றுகூடும் சுதந்திரம் | | | |
| 01 | 18 மே | யாழ் பல்கலைக்கழகம் | நினைவேந்தல் நிகழ்வை ஒழுங்கு செய்த பல்லைக்கழக மாணவர்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டனர் | https://www.tamilguardian.com/content/jaffna-uni-students-defy-threats-mark-may-18 |
| 02 | 17 யூன் | கொழும்பு | கொழும்பின்பெருமிதம்(Colombo Pride) நிகழ்வு கண்காணிப்பிற்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகியது | EQUAL GROUND |
| 03 | 13 யூன் | மட்டக்களப்பு | இல்மனைட் அகழ்விற்கு காணிகள் கையகப்படுத்துதை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது 4 ஆர்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். | https://www.tamilguardian.com/content/four-batticaloa-ilmenite-protestors-arrested |
| 04 | 20 யூன் | வவுனியா | காணாமலாக்கப்பட்டோருக்கான செயற்பாட்டாளரும் வவுனியா காணாமலாக்கப்பட்டோருக்கான குடும்பங்களுக்கான சங்கத்தின் செயலாளருமான கே.ராஜ்குமார்,பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால்(TID) விசாரிக்கப்பட்டார் | https://www.tamilguardian.com/content/vavuniya-disappearances-activist-questioned-tid |
| 05 | 30 யூன் | மன்னார் | மன்னாரில் இயங்கி வரும் சிவில் சமூக அமைப்பான மன்னார் சமூகப்பொருளாதார அபிவிருத்தியமைப்பு (MSEDO) சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர்களால் தேடுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது | https://www.tamilguardian.com/content/mannar-tamil-civil-society-org-raided-and-threatened-sri-lankan-army |
| 06 | 29 யூன் | Colombo | .வேலை நிறுத்தங்ளை சட்ட விரோதமாக்கும் அவசரகாலச் சட்டத்தின் கீழ்,புகையிரத சேவை அத்தியாவசிய சேவையாக அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்திய பின்னர், புகையிரத வேலை நிறுத்தம் மேற்கொண்டமை குறித்து பொலிசார் விசாரணகளை மேற்கொண்டனர் . | http://www.sundaytimes.lk/article/1093303/police-probe-railway-unions-strike |
| (B) | கருத்துச் சுதந்திரம் | | | |
| 07 | 19 மே | இரத்தினபுரி | வெசாக்போயா தினத்திற்கு மறு நாள் வெசாக்காண்டாட்டங்ளைப் படம் பிடித்தமைக்காக 3 இளைஞர்கள் இரத்தினபுரி போலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர். | https://www.newsfirst.lk/2019/05/20/three-persons-arrested-for-photographing-vesak-decorations/ |
| 08 | 23 ஏப்ரல் | யாழ்ப்பாணம் | உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் கறுப்புக்கொடியேற்றுதல் யாழ்பாண மாவட்டத்தில் தடைசெய்யப்பட்டது.கறுப்புக்கொடிகளை அகற்றுமாறு பொலிசார் மக்களை வற்புறுத்தினர். | https://www.tamilguardian.com/content/sri-lanka-police-ban-anti-government-black-flags-jaffna |
| 09 | 28 மே | முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிலாய் | முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிலாய் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி ஊடகவியலாளர் கே.குமனனைத் தாக்கினார் | https://www.tamilguardian.com/content/sri-lankan-police-assault-tamil-journalist-mullaitivu |
| 10 | 2 மே | கம்பஹா மாவட்டம் நீர்கொழும்பு | உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் ரொயிட்டர் ஊடகவியலாளர் படம் பிடித்துக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார் | https://colombogazette.com/2019/05/02/reuters-photographer-arrested-in-negombo-and-remanded/ |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 20 ஏப்பிரல் | முல்லைத் தீவு | இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடிப்படையாகக்கொண்டு பொலிசாரால் உடகவியலாளர் சண்முகம் தவசீலன் கைதுசெய்யப்பட்டார் | https://www.tamilguardian.com/content/tamil-guardian-mullaitivu-correspondent-arrested-and-charged |
| 12 | 13 மே | அநுராதபுரம் | ஊடகவியலாளர் முகமது றிஸ்வி மஹறூப் கைதசெய்யப்பட்டார் | https://srilankamirror.com/news/14036-a-journalist-arrested-with-cds |
| 13 | 9 மே | இடம் குறிப்பிடப்பட வில்லை | சங்கறிலாஹோட்டலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய செய்தி தொடர்பான செய்திப் பத்திரிகை நறுக்குகளை வைத்திருந்தமைக்காக தினகரன் பத்திகையின் ஊடகவியலாளர் கைதுசெய்யப்பட்டு 3 நாட்கள் தடுத்துவைக்கப்பட்டார் | https://www.tamilguardian.com/content/thinakaran-journalist-arrested-over-newspaper-clippings |
| 14 | 24 ஏப்ரல் | Online | பீபீசீ ஊடகவியலாளர் அஸாம் அமீனுக்கு எதிராக பகைமையைத் தூண்டும் இனவிரோத கருத்துரைகளைக்கொண்ட பரப்புரைகளை ஸ்தாபன ரீதியான குழுக்கள் சமூக ஊடகங்கள் வாயிலாக வெளியிட்டன. | https://www.facebook.com/AzzamAmeenSL/photos/a.1528196514153669/2006966189610030/?type=3&theater |
| 15 | 2மே | Online | நடிகையும் சமூகசெயற்பாட்டாளருமான தீபாணி சில்வாவை இலக்குவைத்து பகைமை உணர்வுகளைத்தூண்டும் கருத்துக்கள் சமூக ஊடகங்களில் பரப்புரைசெய்யப்பட்டன. | |
| 16 | 14 யூன் | கொழும்பு | ஊடகக் கம்பனியான மட்டுப்படுத்தப்பட்ட 'பவர் ஹவுஸ்' நிறுவனத்தின் உரிமையாளர் ஒரு நூல்வெளியீட்டின்போது முன்வைத்த கருத்துத் தொடர்பாக வழக்குத்தொடரப்பட்டுள்ளதோடு,குறிப்பிட்ட நூலாசிரியர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். | https://www.colombotelegraph.com/index.php/dilits-speech-incurs-buddhist-monk-wrath/ |
| 17 | 1 ஏப்ரல் | பொல்கஹவலை குருநாலை மாவட்டம் | புத்த சமயத்தை அவமதித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 'சக்திக்க சத்குமார' என்ற எழுத்தாளர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டார் | https://www.amnesty.org/en/documents/asa37/0800/2019/en/ |
| 18 | 14 யூன் | கொழும்பு | உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் ஏற்பட்ட சிங்கள-பௌத்த வன்முறைச் சம்பவங்களை விமர்சித்து ' டெய்லி மிரர் ' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை தொடர்பாக ஊடகவியலாளர் 'குசல்பெரேராவுக்கு' எதிராக பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | https://www.srilankamirror.com/news/14490-senior-journalist-kusal-perera-under-threat |
| **(C)** | **ஒடுக்குமுறைச் சட்டங்கள்** | | | |
| 19 | இல்லை | இல்லை | பல்வேறு சம்பவங்களின்போது,கருத்துச் சுதந்திரத்தையும் ஒன்றுகூடும் சுதந்திரத்தையும் ஒடுக்கும் வகையில்,இவ்வாண்டின் ஆரம்பத்திலேயே 2007இன் 56ஆம் இலக்க சிவில் அரசியல் உரிமைகளுக்கான சர்தேச சமவாயச் சட்டம்,அரச அதிகாரிகளினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. | http://srilankabrief.org/2019/06/sri-lanka-fmm-condemns-the-attempts-to-suppress-journalists-and-media-using-the-iccpr-act/ |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 22ஏப்ரல் – 22ஆகஸ்ட் | இல்லை | உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்ளை அடுத்து,ஜனாதிபதி உடனடியாக அவசரகாலச் சட்டதை நாடுமுழுவதும் பிரகடனப்படுத்தினார்.இச்சட்டம் பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் ஆகஸ்ட் 22 வரை 4 மாதங்கள் நீடிக்கப்பட்டது. | Emergency Regulations http://www.documents.gov.lk/files/egz/2019/4/2120-05_E.pdf<br>https://www.newsfirst.lk/2019/08/23/emergency-regulations-would-not-be-extended-secretary-of-defence/ |
| 21 | 28 ஏப்ரல் மற்றும் 8மே | இல்லை | உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்ளை அடுத்து,முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துவேறுபாட்டிற்குக் காரணமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (CTA)மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பிரதமர் விசேட அறிக்கையை விடுத்து பாராளுமன்றத்தில் இச்சட்டத்தை அங்கீகரிப்பதற்கு ஆதரவை வேண்டினார். | http://www.pmoffice.gov.lk/download/press/D00000000080_EN.pdf<br>Hanzard on 8th May https://www.parliament.lk/uploads/documents/hansard/1557814989037767.pdf |
| **(D)** | **ஏனைய உரிமை மீறல்கள்** | | | |
| 22 | 3 மே | யாழ்ப்பாணம் | யாழ் பல்லைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவரும் செயலாளரும் கைதுசெய்யப்பட்டனர். | http://www.dailymirror.lk/front_page/Jaffna-Uni-Students-Union-President--secretary-arrested-with-Prabha-posters/238-166440 |
| 23 | 27th June | Colombo | அஸ்கிரி பீடத்தின் வண. தலைமைத் தேரர், பகைமை உணர்வைத் தூண்டும் கருத்துரைகளைப் பயன்படுத்தியமையையிட்டு விசாரணைகளைமேற்கொள்ளுமாறு சிவில் சமூகச்செயற்பாட்டாளரான, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து கோரினார். இதற்கு பௌத்த மதகுருமாரும் இனத்துவ தேசியவாதிகளும் எதிர்ப்புத்தெரிவித்தனர். | https://youtu.be/AMA1nbeN68M |
| 24 | 27 யூன் | குருநாகலை | ஒரு முஸ்லீம் வைத்தியருக்கு எதிராக ஒத்துழைப்பு வழங்கவில்லை எனக்கூறி,ஒரு நீதவான் நீதிமன்றில் சீ.ஐ.டீ.பொலிஸ் உத்தியோகத்ரை ஒருபௌத்த பிக்குவான பா.உ. வண. அத்துரலியே ரத்தனதேர்ர் மிரட்டினார். | http://www.ft.lk/front-page/CID-informs-Court-no-evidence-found-for-all-allegations-against-Dr--Shafi-Shihabdeen/44-680838 |
| 25 | ஏப்ரல் 23ம் திகதி முதல் இன்று வரை | நீர்கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்கள் | உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை அடுத்து வெளிநாட்டு அகதிகள் மற்றும் இலங்கையில் தஞ்சம் கோரியோர் அவர்கள் தங்கியிருந்த இடங்களில் இருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்..சிலருக்கு அச்சுறுத்தல்களும் வன்முறைகளும் விடுக்கப்பட்டன.அவர்களுக்கு உதவிய மனிதஉரிமைப் பாதுகாவலர்களுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் பல்வேறு தொந்தந்தரவுகளை எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டது.திடீர் தாக்குதல்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. . | |

# A. ஒன்றுகூடும் மற்றும் ஸ்தபான ரீதியாக அணிதிரளும் சுதந்திரம்

## 1. மே 18 ஆந் திகதி நினைவேந்தலில் பங்குபற்றிய யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு அச்சுறுத்தல்

யாழ்.பல்கலைக்கழகத்தின் முல்லிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு அயலில் மேற்கொண்ட நினைவேந்தலை நிறுத்துவதற்கு பொலிஸாரும் படையினரும் மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். எவ்வாறாயினும் அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாது அவர்கள் நினைவேந்தலை நடத்தியதாக தமிழ் கார்டியன் இணையதளம் அறிக்கையிட்டுள்ளது. முன்னைய சம்பவத்தோடு தொடர்புடைய மாணவ செயற்பாட்டாளர்களை கைது செய்த பின்னர் பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. அதேசமயம் இதனிடையே இந் நினைவேந்தல் இடம்பெற்றுள்ளது.[3]



*யாழ்.பல்கலைக்கழகத்தின் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அருகே பல்கலைக்கழக மாணவர்களும் ஊழியர்களும் ஒன்றுகூடி உள்ளனர் - நிழற்படம் Tamil Guardian*

[3] Tamil Guardian "Jaffna Uni students defy threats to mark May 18" published on 18th May 2019 https://www.tamilguardian.com/content/jaffna-uni-students-defy-threats-mark-may-18 (last access on 29th June 2019)

## 2. கொழும்பின் பெருமிதம் (Colombo Pride) சவால்களுக்கிடையே இடம்பெற்றது

இலங்கையின் LGBTIQ சமூகமும் Equal Ground நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யும் கொழும்பின் பெருமித விழா 15 ஆவது தடவையாக கொழும்பில் யூன் 11 - 23 வரை இடம்பெற்றது. இம்முறை முதன்முறை பாதை யாத்திரை ஒன்றையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டில் நிலவிய பாதுகாப்பு கெடுபிடிகள் காரணமாக அது இரத்து செய்யப்பட்டது. அதே சமயம் விழாவில் இடம்பெற்ற அபிமானி திரைப்பட விழா புலனாய்வுப் பிரிவினரின் கண்காணிப்பிற்கு (surveillance) உட்படுத்தப்பட்டதென ஏற்பாட்டாளர்கள் எடுத்துக் கூறினர். அதேசமயம் சினிமாப்படக் காட்சிக்கான சட்டபூர்வமான அங்கீகாரத்தைப் பெற்றிருந்த போதிலும், பொலிஸார் சினிமா விழாவிற்கு வருகை தருவோரையும் ஏற்பாட்டாளரையும் கைதுசெய்ய இடமுண்டென அச்சுறுத்திய அதேவேளை சினிமாப் படத்தின் பிரதியை பொலிஸாருக்கு வழங்குமாறு அழுத்தம் கொடுத்துள்ளனர். எவ்வாறாயினும் ஏற்பாட்டாளர்கள் சினிமாப் படத்தின் பிரதியை பொலிஸாருக்கு வழங்க மறுத்தனர். அதேசமயம் விழாவின் நிகழ்விற்கு வருகைதந்த ஒரு சிலரின் அடையாளத்தை ஏற்பாட்டாளர்கள் பரிசீலித்தபோது, தாம் புலனாய்வுப் பிரிவைச் சார்ந்தவர்களென ஏற்றுக்கொண்டுள்ளதோடு தாம் பாதுகாப்பை வழங்க வருகை தந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

## 3. இல்மனைட் கைத்தொழிற்சாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த நால்வர் கைது



*இல்மனைட் கைத்தொழிற்சாலைக்கு அருகே ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கியிருந்தபோது- – நிழற்படம் Tamil Guardian*

இல்மனைட் சுரங்கங்களை அகழ்வதற்கு காணிளை கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்த மட்டக்களப்பு வாசிகள் நால்வர் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். போராட்டக்காரர்கள் அதன் வாசற் கதவுகளுக்கு சேதம் விளைவித்தனரெனவும், அவ்விடத்தில் குழப்பங்களை விளைவித்ததாகவும் இல்மனைட் கைத்தொழிற்சாலையின் பதவிநிலை உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டிற்கமைய இந்நால்வர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். மறுநாள் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனரென தமிழ் கார்டியன் இணையதளம் அறிக்கையிட்டது.[4]

## 4. வவுனியாவின் சமூக செயற்பாட்டாளரிடம் குறுக்கு விசாரணை

வவுனியா பிரதேசத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகச் செயற்படும் சமூகச் செயற்பாட்டாளரிடம் பங்கரவாத விசாரணைப் பிரிவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

வவுனியா பிரதேசத்தின் காணாமற் ஆக்கப்பட்டோருக்கான சங்கத்தின் செயலாளர் திரு.கே.ராஜகுமாரனிடம் பயங்கரவாத விசாரணை திணைக்களத்தினால் யூன் மாதம் 20 ஆந் திகதி இடம்பெற்ற எதிர்ப்பியக்கத்தினிடையே இவ்வாறு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதென தமிழ் கார்டியன் அறிக்கையிட்டுள்ளது.[5]

## 5. மன்னார் சிவில்சமூக அமைப்பொன்று இராணுவத்தினரால் சுற்றி வளைப்பு

கடந்த வியாழக்கிழமை சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர் சிலரால் மன்னாரில் அமைந்த சிவில்சமூக அமைப்பொன்று சுற்றிவளைக்கப்பட்ட போதிலும் சந்தேகத்திற்கிடமான எந்தத் தடயப்பொருளும் கண்டெடுக்கப்படா விட்டாலும் வாய்மொழிமூலம் தொந்தரவுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக மன்னாரில் அமைந்த சமூகப் பொருளாதார அபிவிருத்தி அமைப்பு (MSEDO) விசாரணைக்குட்படுத்தப்பட்டது. மேற்படி அமைப்பு இப்பிரதேசத்தின் காணி உரிமைபற்றி குரலெழுப்பிய ஓரமைப்பாகும். இந்த சோதனை நடவடிக்கையின்போது சுமார் ஒரு டசின் இராணுவத்தினர் பங்குபற்றியுள்ளனர். அதேசமயம் இச்சோதனையிடலுக்கு அமைப்பின் பணிக்குழுவினர் இணங்கிய போதிலும்,. வருகை தந்த சிரேஷ்ட அதிகாரி பணிக்குழுவினரை வாய்மொழிமூலம் அச்சுறுத்தி அலுவலகத்தின் CCTV கமெராவை செயலிழக்கச்செய்யுமாறு ஊழியர்களுக்கு கட்டளையிட்டுள்ளார் என தமிழ் கார்டியன் அறிக்கையிட்டுள்ளது.[6]

## 6. ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தத்திற்கு எதிரான விசாரணை

ரயில் சேவை அத்தியாவசிய சேவை என, அவசரகாலச் சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் பிரகடனப்படுத்திய பின்னர், தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் சட்டவிரோதமானவை எனப் பிரகடனப்படுத்தப்'பட்டது.ரயில்வே பொதுமுகாமையாளர் டிலந்த பர்ணாந்துவின் முறைப்பாட்டின் கீழ் ரயில்வே தொழிலாளர்கள் தொடர்பான வேலைநிறுத்தமொன்றை ஒழுங்குசெய்தவர்களுக்கு எதிராக பொலிஸார் விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளதாக யூன் 29ஆம் திகதிய ஞாயிறு 'ரைம்ஸ்' (Sunday Times) பத்திரிகை அறிக்கையிட்டிருந்தது.

---

[4] Tamil Guardian Four Batticaloa ilmenite protestors arrested 16 June 2019 https://www.tamilguardian.com/content/four-batticaloa-ilmenite-protestors-arrested (last access on 29th June 2019)

[5] Tamil Guardian. "Vavuniya disappearances activist questioned by TID" published on 29th June 2019. https://www.tamilguardian.com/content/vavuniya-disappearances-activist-questioned-tid

[6] Tamil GuardiansMannar Tamil civil society org raided and threatened by Sri Lankan army 02 June 2019 https://www.tamilguardian.com/content/mannar-tamil-civil-society-org-raided-and-threatened-sri-lankan-army ( last access on 29th June 2019)

## B. கருத்துச் சுதந்திரம்

### 7. வெசாக் அலங்காரங்களைப் படம் பிடித்த காரணத்தினால் மூன்று இளைஞர் கைது

வெசாக் அலங்காரங்களைப் படம்பிடித்த காரணத்தினால் இரத்தினபுரி நகரத்தின் மூன்று இளைஞர்கள் இரத்தினபுரி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாதிகளுக்கு வழங்குவதற்காக ஒரு கமெராவும்,ரோனர் கமெராவையும் பயன்படுத்தி இரத்தினபுரி நகரத்தை படம்பிடித்ததாக பௌத்த பிக்கு ஒருவரை முதன்மையாகக் கொண்ட ஒரு கோஷ்டியினரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டினால், இவ்வாறாக இரத்தினபுரி பிரதேசத்தில் வதியும் சமூகசெயற்பாட்டாளரான சபரகமுவ பல்கலைக்கழகத்தின் அனுஷ்க டில்ஹார என்பவரும் அவரது நண்பர்களான இரண்டு முஸ்லிம் இளைஞர்களும் இவ்வாறாகக் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது [7] இவர்கள் படம் எடுப்பதற்கு சட்டரீதியாக தடைசெய்யப்பட்ட பிரதேசத்தில் இவ்வாறு இடம்பெறவில்லை. இன்போர்ஃம் நிறுவனத்திற்கு கிடைத்த தகவலின்படி படம் எடுப்பதற்கு முஸ்லிம் இளைஞர்கள் தொடர்புகொண்டமையாலும், முறைப்பாடு செய்தவர் ஒரு பௌத்த பிக்குவாக இருந்த காரணத்தினாலும் அவர்கள் சார்ந்த இனக்குழுமத்தை அடிப்படையாகக்கொண்டு தான்தோன்றித்தனமாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒரு மாதத்திற்கும் அதிகமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு யூன் 26 ஆந் திகதி பிணை வழங்கப்பட்டதென 'ஜனயுகய' பத்திரிகை குறிப்பிட்டது.

### 8. யாழ்.பொலிஸார் கறுப்புக்கொடி ஏற்றுதலை தடைசெய்தனர்

உயிர்த்த ஞாயிறு குண்டு விபத்தினால் பாதிக்கப்பட்டோர் சார்பில் செவ்வாய்கிழமை நாடுபூராவும் சோக தினமாக பிரகடனப்படுத்தப்பட்டதோடு இதன்பொருட்டு பொதுமக்கள் கறுப்புக்கொடி ஏற்றியதை யாழ் பொலிஸார் தடைசெய்தனர். இவ்வாறாகக் கறுப்புக்கொடி ஏற்றுவது அரசுக்கெதிரான எதிர்ப்பியக்கமாகத் தோற்றுகின்ற காரணத்தினாலேயே மேற்படி தடை விதிக்கப்பட்டதென அறிக்கையிடப்பட்டுள்ளது. அதேசமயம் நெல்லியடி பொலிஸார் கறுப்புக்கொடிகளை அகற்றுமாறு பிரதேசவாசிகளை நிர்ப்பந்தித்ததோடு உயிரிழந்தோருக்கு அஞ்சலிசெலுத்துவதற்கு வெள்ளைக்கொடி ஏற்றுவதற்கு மக்களை ஊக்குவிக்க பொலிஸார் முயற்சித்தனர்.[8].

### 9. முல்லைத்தீவில் தமிழ் ஊடகவியலாளருக்கு எதிராக பொலிஸார் தாக்குதல்


முல்லைத்தீவில் கருத்து வேற்றுமைக்கு ஆளாகியுள்ள நீராவியடி பிள்ளையார் கோயில் அமைந்துள்ள அமைவிடத்தில் புதிதாக நிருமாணிக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையின் CCTV கமெராவை அகற்றுவதற்க்கான நீதிமன்றக் கட்டளையை நிறைவேற்றுவதில் முன்னேற்றம் காணப்படாமையை அறிக்கையிடச் சென்ற தமிழ் கார்டியன் ஊடகவியலாளர் குமணனுக்கு

---

[7] News First Three persons arrested for photographing Vesak decorations 20 May, 2019 https://www.newsfirst.lk/2019/05/20/three-persons-arrested-for-photographing-vesak-decorations/

[8] Tamil Guardians Sri Lanka police ban 'anti-government' black flags in Jaffna 25th April 2019 https://www.tamilguardian.com/content/sri-lanka-police-ban-anti-government-black-flags-jaffna(last access on 29th June 2019)

முல்லைத்தீவு கோகிலாய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தாக்குதல் நடத்தியதாக தமிழ் கார்டியன் இணையதளம் அறிக்கையிட்டுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர் ஊடகவியலாளருக்கு வாய்மொழி மூலம்18 பேசியும் தாக்குதல் நடத்தி அவரது கமெராவை வீசி அவரைப் படம் பிடித்த்தாகவும் மேலும் அறிக்கையிடப்பட்டுள்ளது.[9].பொது மக்களின் நலன் கருதி தகவல் அறியும் உரிமையைப்பயன்படுத்தியமைக்காக ஏப்ரல் 2018ல் கே.கண்ணன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.[10].



*ஊடகவியலாளர் குமணனைத் தாக்கி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படம் எடுக்கும் சந்தர்ப்பம் - தமிழ் கார்டியன்*

### 10. செய்தி சேகரிக்கச் சென்ற ரொய்ட்டர் ஊடகவியலாளர் விளக்கமறியலில்

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டின் நிலைமையை அறிக்கையிட்ட ரொய்ட்டர் பத்திரிகைச் சேவையின் ஊடகவியலாளர் ஒருவர் மே மாதம் 03 ஆந் திகதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ‘Sri Lanka Brief’ இணையதளம் அறிக்கையிட்டுள்ளது. இக்கைது கட்டான பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது [11]. புது டில்லியில் கடமையாற்றும் நிழற்படக் கலைஞரும் ஊடகவியலாளருமான டெனிஸ் சித்திக் என்ற நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலினபோதுகொல்லப்பட்ட மாணவரின் தகவல்ளைத் திரட்டவே இந்த

[9] Tamil Guardian Sri Lankan police assault Tamil journalist in Mullaitivu 28 May 2019 https://www.tamilguardian.com/content/sri-lankan-police-assault-tamil-journalist-mullaitivu (last access on 29th June 2019)

[10] Daily FT. “Sri Lanka’s Northern Province journalists win awards for using RTI for reporting” published on 11th April 2019 http://www.ft.lk/news/Sri-Lanka-s-Northern-Province-journalists-win-awards-for-using-RTI-for-reporting/56-676314

[11] Colombo Gazette “Reuters photographer arrested in Negombo and remanded” published on 2nd May 2019 https://colombogazette.com/2019/05/02/reuters-photographer-arrested-in-negombo-and-remanded/

ஊடகவியலாளர் அங்கு சென்றுள்ளார் [12]. விளக்கமறியலில் அழைப்பதற்கு முன்னர், குறிப்பிட்ட ஊடகவியலாளர் பிரதேசத்தின் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பிட்ட பிரதேசத்தின் பாடசாலை அதிகாரிகளால் மேற்கொண்ட முறைப்பாட்டின்கீழ் பொலிஸார் செயற்பட்டுள்ளதாகவும், மேற்படி பாடசாலைக்கு ஊடகவியலாளர் அனுமதியின்றி பிரவேசித்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். மே மாதம் 02 - 15 ஆகிய நாட்களுக்கிடையே பொலிஸ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் மேற்படி இணையதளம் அறிக்கையிடுகிறது. எப்படயோ அவருக்கு மறுநாள் பணை வழங்கப்பட்டது.ஆனால் இதுதொடர்பாக கருத்து தெரிவிப்பதற்கு ரொய்ட்டர் ஊடகசேவை மறுப்பு தெரிவித்துள்ளது. [13] சித்தீக் ஏழுபேர்கொண்டரொயிட்டர் அணியின் ஓர் உறுப்பினர்,அவர் 2017ல் ரோஹிங்யா சமூகம் எதிர்கொண்ட வன்முறைகளைப்பற்றிய சிறப்பு நிழற்படத்திற்கான புளிட்சர் (Pulitzer) விருதை 2018ல் பெற்றுக்கொண்டார்.[14]

## 11. முல்லைத்தீவில் தமிழ் கார்டியன் ஊடகவியலாளர் கைது

இலங்கைக் கடற்படையினால் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கமைய தமிழ் கார்டியன் ஊடகவியலாளர் ஒருவர் ஏப்பிரல் 20 ஆந் திகதி காலையில் கைதுசெய்யப்பட்டாரென தமிழ் கார்டியன் இணையத்தளம் அறிக்கையிட்டுள்ளது.

முல்லைத்தீவில் பிரபல ஊடகவியலாளரான திரு சண்முகம் தவசீலன் வெள்ளிக் கிழமை காலையில் முல்லைத்தீவு பொலிஸாரால் விசாணை செய்யப்பட்ட பின்னர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளாரென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஏப்பிரல் 07 ஆந் திகதி காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் [15] பின்னர், கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் ஆர்ப்பாட்டக்காரர்களின் நிழற்படத்தை எடுத்துள்ளார். இதன்போது அவருடைய அடையாளம்பற்றி ஆர்ப்பாட்டக்காரர்களும் குறிப்பிட்ட ஊடகவியலாளரும் கேள்விக்குட்படுத்தப்பட்டனர். இதன்போது ஒரு மோதல் ஏற்பட்ட பின்னர் அந்நபர் தான் ஓர் கடற்படை அதிகாரியென பிரகடனப்படுத்தியுள்ளார். பின்னர் கடற்படை அதிகாரி தான் தாக்கப்பட்டதாக முல்லைத்தீவு பொலிஸாரிடம் சென்று முறைப்பாடு செய்துள்ளார். கடற்படை அதிகாரி தன்னைத் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக ஊடகவியலாளர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டு சோடிக்கப்பட்டதொன்றாகும் எனவும், அச்சுறுத்துவதற்கும் துன்புறுத்துவதற்கும் இவ்வாறு பொய்க் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்பதும் ஊடகவியலாளர் சார்பில் தோன்றிய சட்டத்தரணி எடுத்துரைத்துள்ளார். இது பலிவாங்கப்படுவதற்கு மேற்கொண்ட ஒரு முயற்சியென தவசீலன் கூறுகின்றார். பின்னர் தவசீலன் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு, முதலாவது வழக்கு விசாரணை ஏப்பிரல் 30 ஆந் திகதி இடம்பெற்றதோடு அடுத்த விசாரணை

[12] Ibid

[13] Srilankabrief Sri Lanka Arrests Reuters journalists over ‘trespass’ 03/05/2019http://srilankabrief.org/2019/05/sri-lanka-arrests-reuters-journalists-over-trespass/ (last access on 29th June 2019)

[14] Scroll.in "Pulitzer-winning Indian photojournalist arrested in Sri Lanka for trespass gets bail: Reports" published on 3rd May 2019 https://scroll.in/latest/922176/pulitzer-winning-indian-photojournalist-arrested-in-sri-lanka-for-trespass

[15] https://www.tamilguardian.com/content/mullaitivu-families-urge-international-community-deliver-justice

செப்டெம்பர் 10 ஆந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதென தமிழ் கார்டியன் அறிக்கையிட்டுள்ளது.[16].

இவ்ஊடகவியலாளர் அண்மித்த ஆண்டுகளில் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கும் தொந்தரவுகளுக்கும் ஆளாகியுள்ளார். அலம்பலில் அழிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் மயானம் தொடர்பான காணிகளைப் படையினர் கையகப்படுத்தியது தொடர்பாக அறிக்கையிட்டுக் கொண்டிருக்கையில் தவசீலன் கடந்த ஆண்டில் படையினரால் தற்காலிகமாகத் தடுத்து வைக்கப்பட்டு அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். தனது கமெராவைப் படையினரிடம் ஒப்படைக்கவேண்டுமென்ற கோரிக்கையை நிராகரித்தமையால் அவர் இவ்வாறாகத் தடுத்து வைக்கப்பட்டார்.[17] இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தனித்தனியாக விசாரணை செய்து வருகிறது. காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களின்போது எதிர்காலத்தில் கடற்படையினர் இடையீடு செய்யப்போவதில்லையெனவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது..[18]

## 12. ஊடகவியலாளர் மொஹொமட் ரிஸ்வி மஹரூப் கைதுசெய்யப்பட்டார்

ஏப்பிரல் 21 ஆந் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போது, அனுராதபுரம் ஊடகவியலாளரான மொஹொமட் ரிஸ்வியைக் கைதுசெய்தமைக்கு எதிராக சுதந்திர ஊடக இயக்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.



*ஊடகவியலாளர் ரிஸ்வி மஹருப் - அனுசரணை Srilankabrief இணையதளம்*

[16] https://www.tamilguardian.com/content/court-postpones-case-against-tamil-journalist

[17] Tamil guardian Tamil Guardian Mullaitivu correspondent arrested and charged 20 April 2019 https://www.tamilguardian.com/content/tamil-guardian-mullaitivu-correspondent-arrested-and-charged ( last access on 29Th June 2019)

[18] https://www.tamilguardian.com/content/human-rights-commission-investigates-navy-and-police-harassment-mullaitivu-journalist

இந்த ஊடக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு திரு மஹரூப் இந்த ஊடக அறிவித்தலின் பிரகாரம் திரு ரிஸ்விக்கு உரித்தான கட்டடத்தில் இருந்த வீடியோ மற்றும் சீடி நடாக்களில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக தவ்ஃபீத் ஜமாத் [19] அமைப்பின் விரிவுரைகள், சொற்பொழிவுகள் உட்பட பிரசார மேம்பாட்டு பொருட்கள் உண்டெனக் கூறி பொலிஸார் ரிஸ்வியைக் கைது செய்துள்ளனர் [20] . அதன் பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். சுமார் ஒரு வாரத்தின் பின்னர், மேற்படி சீடி இருவெட்டுக்களில் தவ்ஃபீத் ஜமாத் அமைப்பு பற்றிய எதுவித சொற்பொழிவோ அல்லது மேம்பாட்டுத் தகவலோ உள்ளடக்கப்படாமையால், பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் திரு. ரிஸ்விக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட மாட்டாதென பொலிஸார் நீதிமன்றத்தில் கூறினர். பின்னர் ஊடகவியலாளர் ரிஸ்வி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். திரு ரிஸ்வி ஒரு ஊடகவியலாளராக பல தசாப்தங்களாக தொலைக்காட்சி ஊடகவியலாளர் என்ற வகையில் அனுராதபுர பிரதேசத்தை மையமாக்க் கொண்டு சேவைசெய்து வருகிறார். தான்தோன்றித்தனமான இந்நடவடிக்கைகளை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. தேசிய பாதுகாப்பு தொடர்பாகச் செயற்படும்போது அரச நிறுவனங்கள் கருத்துச் சுதந்திரத்தையும் ஊடகச் சுதந்திரத்தையும் அடிப்படை உரிமைகளையும் கவனத்தில்கொள்ள வேண்டும்[21].

## 13. தினகரன் பத்திரிகையின் ஊடகவியலாளர் கைதுசெய்யப்பட்டார்

சங்கறிலாஹோட்டலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய செய்தி தொடர்பான செய்திப் பத்திரிகை நறுக்குகளை வைத்திருந்தமைக்காக தினகரன் பத்திரிகையின் ஊடகவியலாளர் கைதுசெய்யப்பட்டு 3 நாட்கள் தடுத்துவைக்கப்பட்டார்.அவர் மே 12ம் திகதி விடுவிக்கப்பட்டார். [22] கைது எப்பிரதேசத்தில் இடம்பெற்றது என அறிக்கையிடப்படவில்லை.ஊடகவியலாளரின் பொதி பாதுகாப்புப் படையினரால்சோனையிடப்பட்போது கைது இடம் பெற்றது.

## 14. ஊடகவியலாளர் அஸாம் அமீனுக்கு எதிராக பொய்க்குற்றச்சாட்டுக்கள்

2019 ஏப்பிரல் 21 ஆந் திகதி நாட்டில் ஏற்பட்ட தீவிரவாத தாக்குதலோடு ஸ்தாபன ரீதியாக அணிதிரண்ட கோஷ்டியினர் அஸாம் அமீனை இலக்குவைத்து சமூக வலைத்தளங்களிலும், இணையதளங்களிலும் இனவாத பகைமை உணர்ச்சியைத் தூண்டக்கூடிய ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அஸாம் அமீன் பி.பீசீ நிறுவனத்துடன் உயிர்த்த ஞாயிறு தொடர்பாக சிங்கள பௌத்த விரோத அடிப்படையிலும் தவறான பக்கச் சார்பான முறையில் செய்திகளை வெளியிடுவதாக சிங்கள பௌத்த நபர்கள் குற்றம்சாட்டி உள்ளனர். அதேசமயம் அவருக்கு எதுவித தொடர்புமற்ற பொய்யான செய்திகளை அவர்

[19] Name of the local terrorist organization which carried out the Easter Sunday bomb attacks

[20] Sri Lankan Mirror. "A journalist arrested with CDs" published on 13th May 2019 https://srilankamirror.com/news/14036-a-journalist-arrested-with-cds

[21] Srilankabrief FMM condemns taking journalist mohammed rizvi maharoof into custody on baseless charges http://srilankabrief.org/2019/05/fmm-condemns-taking-journalist-mohammed-rizvi-maharoof-into-custody-on-baseless-charges/( last access on 29th June 2019)

[22] Thinakaran journalist arrested over newspaper clippings https://www.tamilguardian.com/content/thinakaran-journalist-arrested-over-newspaper-clippings

மேற்கொண்டதாகப் பல சுவரொட்டிகள் முக நூல்களில் பரப்புரை செய்யப்பட்டன. இப்பொய்யான குற்றச்சாட்டுக்களை நிராகரித்து, தான் அறிக்கையிட்ட செய்திகள் உண்மையானவையென்றும், அவை ஊடகநெறிமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டவையென்றும் ஏப்பிரல் 24 ஆந் திகதி முக நூலில் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.[23].




*ஊடகவியலாளர் அஸாமிற்கு எதிராக சமூக ஊடகங்களில் பரிமாறப்பட்ட பொய்யான அறிக்கைகள் - படம் அஸாம் அமீனின் முக நூலில் இருந்து. Sinhala text in the photo says "கத்தோலிக்க தேவாலயங்களுக்கு குண்டு வைத்தவர்கள் சிங்கள பௌத்த தீவிரவாதிகளென இவன் பிபிசீ யிடம் கூறியுள்ளான்"*

## 15. தீபானி டி சில்வாவுக்கு எதிரான பொய்க் குற்றச்சாட்டுக்கள்

தீபானி சில்வாவினால் முன்வைத்த ஒரு கூற்றை தவறாகப் பொருள்கோடல் செய்து, அவருக்கு எதிராக பகைமை உணர்ச்சியைத் தூண்டக்கூடிய வகையில் பல கூற்றுக்கள் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டன. மே மாதம் 02 ஆந் திகதி பத்தரமுல்லையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்பற்றி இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போது, சோசலிசக் கலைச் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி உரையாற்றிய சிரேஷ்ட நடிகையும், சமூகச் செயற்பாட்டாளருமான தீபானி டி சில்வா பின்வருமாறு கோரினார்.

> எவ்வகையான சமூகப் பிரிவினர் இவற்றினால் இல்லாமல் போகின்றனர். முஸ்லிம்களாக இருந்தாலும் அவர்கள் எமது பிள்ளைகள் எல்லோரும் 20 - 30 வயதுடைய பிள்ளைகள்... ஏன் அந்தப் பிள்ளைகள் தம்மை அழித்துக்கொள்கிறார்கள். அவர்கள் வெறும் பிள்ளைகளா இல்லை. நன்கு கல்விகற்ற பிள்ளைகள். உண்மையில் அவர்களுடைய கல்வித் தகைமைகளை என்னால் சிந்திக்கவும் முடியவில்லை. அவர்கள் பொறியியலாளர்கள். தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தகைமைகளைப் பெற்றவர்கள்.... அப்படியானால் இத்தகைய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட எவ்வாறு தூண்டப்பட்டனர். இக்காரணத்தை நாம் கண்டறிய

[23] Facebook Azzam ameens post 24th April 2019 https://www.facebook.com/AzzamAmeenSL/photos/a.1528196514153669/2006966189610030/?type=3&theater

வேண்டும். அப்படியானல் இங்கு ஏதோ தவறு இருக்கிறது. நாம் ஓர் மதத்தின்மீது மாத்திரம் குற்றத்தைச் சுமத்திவிட்டு பேசாமல் இருக்க முடியாது. எமது ஆட்சியாளர்களினதும், அரசியல்வாதிகளினதும் தவறுகளை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். இந்நடவடிக்கைகள் மதத் தீவிரவாதிகள் மூலமே செயற்படுத்தப்படுகிறது. அவ்வாறாயின் மேலும் எமக்கு மதவாதமோ இனவாதமோ அவசியமில்லை/. [24]"

இக்கூற்றைத் தவறாகப் பொருள்கோடல் செய்து, இம்மூத்த கலைஞர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நியாயப்படுத்த முயற்சிக்கிறார் எனக் கூறி அவருக்கு எதிராக பகைமை உணர்ச்சியைத் தூண்டக்கூடிய வகையில் ஸ்தாபன ரீதியாக பல்வேறு நபர்கள் இக்கைங்கரியத்தில் ஈடுபடுகின்றனர்.

### 16. தன்னிச்சையாகச் செயற்படுபவர் (தடப்பரயா) பத்திரிகை ஆசிரியரிடமிருந்து வாக்குமூலத்தைப் பெறுகிறார்!

**பிரதம நீதவான் நீதிமன்றம்,**
**கொழும்பு 12,**
**2019.06.14**
**தில்சான் பத்திரத்ன,**
**‘தடம்பரயா நூலாசிரியர்**

**கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தின் பி 12335/ 01/19 வழக்கு இலக்கத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை**

**கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் பி12335/01/19 இலக்கம் கொண்ட வழக்கிற்கு ஏற்ற வகையில் ஸ்தாபன ரீதியான குற்றத் தடுப்பு பிரிவின்மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு ஏற்புடையவாறு, தடம்பராயா என்ற நூலை எழுதிய தில்சான் பத்திரத்ன என்பவரிடமிருந்து வாக்குமூலம் ஒன்றைப் பெறுவது அவசியமென ஸ்தாபன ரீதியான குற்றச்செயல்களைத் தடுக்கும் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒரு கோரிக்கையை விடுத்துள்ளார்.**

**மேற்படி கோரிக்கைக்கமைய தடம்பரயா என்ற நூலை எழுதி அதனை வெளியிட்டு வைக்கும் விழா மேற்கூறிய கோரிக்கைக்கமைய தடம்பரயா என்னும் நூலை வெளியீட்டு விழா இடம்பெற்ற திகதி, அமைவிடம் மேற்படி விழாவின்போது பங்குபற்றிய நபர்கள்பற்றிய விபரங்களுடன் ஒரு வாக்குமூலத்தை ஸ்தாபனரீதியான குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியிடம் வழங்குமாறு 1979 இலக்கம் 15 கொண்ட குற்றவியல் சட்டக்கோவை சட்டத்தின் 124 ஆவது வாசகத்திற்கமைய இத்தால் தங்களுக்கு அறிவிக்கிறேன்.**

**ஒப்பம் வாசிக்க முடியாதுள்ளது.**
**பிரதம நீதவான்,**
**பிரதான நீதவான் நீதிமன்றம்**
**கொழும்பு 12**

*கொழும்பு பிரதம நீதவானினால் விடுக்கப்பட்ட கட்டளை படம் டில்சான் பத்திரத்னவின் முகநூல் கணக்கில் இருந்து (தமிழ் மொழிபெயர்ப்பு)*

தடப்பரயா என்ற நூலின் வெளியீட்டு விழாவின்போது கருத்துத் தெரிவித்த ‘திரண" நிறுவனத்தின் தவிசாளர் திலீப் ஜயவீரவுக்கு எதிராக ஸ்தாபன ரீதியான குற்றங்களை இல்லாதொழிக்கும் பிரிவு வழக்குத் தொடர்ந்துள்ளது.[25]. இது தொடர்பாக ஸ்தாபன ரீதியான

[24] Youtube SLGear මරාගෙන මැරුණෙත් අපේ හොඳ උගත් මුස්ලිම් දරුවෝ මෙන්න වීඩියෝව 3rd May 2019 https://www.youtube.com/watch?v=KCXnws6fQnk
[25] Facebook Dilshan Pathirana 19th June 2019 https://www.facebook.com/photo.php?fbid=872733926452714&set=a.160823580977089&type=3&theater

குற்றங்களைத் தடுக்கும் பிரிவு மேற்படி நூலின் ஆசிரியரான டில்சான் பத்திரத்னவிடம் வாக்குமூலம் பதியப்பட்டுள்ளது. பௌத்த தகவல்கள் மையத்தின் அபுலுகல்லே சிறி ஜினாநந்த 24 தேரரினால் மேற்கொண்ட ஒரு முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இந்நூலாசிரியரிடம் ஒரு வாக்குமூலத்தை பெற நேர்ந்தது. [26] [27]

### 17. சக்தி கசத் குமார கைதுசெய்யப்படுதல்

விருதுகளை வென்றெடுத்த எழுத்தாளராகிய சக்தி கசத் குமார பொல்காவலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, பொல்காவலை நீதிமன்றத்தின்முன் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இதுவரை மூன்று மாதத்திற்கும் மேலாக அவர் இவ்வாறாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சக்த்திக்கவினால் எழுதப்பட்ட சிறு கதைமூலம் புத்த தர்மம் எள்ளிநகையாடப்பட்டுள்ளதெனவும், இனங்களுக்கிடையே பகைமை உணர்ச்சியைத் தூண்டக்கூடிய வகையில் அச்சிறுகதை அமைந்துள்ளதெனவும், பௌத்த தகவல் மையத்தின் அங்கலுகல்லே ஜினாநந்த தேரரால் பெப்ருவரி 25 ஆந் திகதி பொலிஸ் மா அதிபருக்கும், மார்ச் மாதம் ஆரம்பத்தில் மேலும் ஒரு பௌத்த பிக்குமார் குழுவினாலும் பொல்காவலை பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டது.. 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் பற்றிய சட்டத்தின்கீழ், இனரீதியன - மதக் குழுமங்களுக்கிடையே மோதல் ஏற்படுத்தக்கூடிய கூற்றுக்கள் வெளியிடப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இக்கைதிக்கெதிராக கலைஞர்'கள், ஊடகவியலாளர்கள், சிவில்சமூக அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் பலர் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். யூலை 30ம் திகதி அவர் ''மனச்சாட்சிக்கான கைதி' என சர்தேச மன்னிப்புச் சபை பிரகடனப்படுத்தியதோடு உடனடியாக அவர் விடுலைசெய்யப்படவேண்டுமென இலங்கை அரசாங்கத்தைக்கோரியது.[28].

இச்சிறுகதையின் சாராம்சம் பின்வருமாறு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும்போது துறவியின் அந்தஸ்த்தை ஏற்கும் ஹால்வல்லே கஸ்சப பௌத்ததேரர் கசுன் பலிகவடன எனத் தனது பெயரை மாற்றி, தனது பௌத்த தேரருக்குரிய விடுதியில் இருந்து வேறோர் நண்பரின் விடுதிக்கு செல்லுதல் பற்றிய சிறுகதையாகும். அங்கு மேற்படி நண்பரால் எழுதப்பட்ட சிறுகதை ஒன்று இப்பௌத்த குரு வாசிப்பதற்கு வழங்கப்படுகிறது. புத்தபெருமான் முத்தி நிலையடைவதற்கு முன்பு பொது நிலையினராக வாழ்ந்தபோது இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டார் (சித்தாத்தரதும் யசோதரவினதும் திருமண பந்தத்தினால்) பிறந்த மகனான இராகுல குமாரனின் தந்தை சித்தாத்தர் அல்லர் என்றே சிறுகதை கூறுகிறது. கசுனின்

---

[26] Lanka Views දිලිත්ගේ ප්‍රකාශය ගැන 'දඩබ්බරයා' කර්තෘගෙන් කටඋත්තර ගනී 22th June 2019!https://www.lankaviews.com/%e0%b6%af%e0%b7%92%e0%b6%bd%e0%b7%92%e0%b6%ad%e0%b7%8a%e0%b6%9c%e0%b7%9a-%e0%b6%b4%e0%b7%8a%e2%80%8d%e0%b6%bb%e0%b6%9a%e0%b7%8f%e0%b7%81%e0%b6%ba-%e0%b6%9c%e0%b7%90%e0%b6%b1-%e0%b6%af/ (last access on 29th June 2019)

[27] Dilith's Speech Incurs Buddhist Monk Wrath https://www.colombotelegraph.com/index.php/diliths-speech-incurs-buddhist-monk-wrath/ published on 21st June 2019.

[28] http://www.dailynews.lk/2019/07/31/local/192679/amnesty-international-declares-shakthika-'prisoner-conscience'

பிரதிபலிப்பு இதனை தீயிடுவதற்கு தகுதியானது என்பதேயாகும். அதேசமயம் இச்சிறுகதையின் இறுதியில் புத்த கோவிலின் (பன்சலை) பிரதம பிக்குவிற்கும், கஸ்சப்பிற்கும் இடையில் ஏற்பட்ட ஒரினச் சேர்கை தொடர்பாக மறைமுகமாக ஒரு கனவுக்காட்சியாகக் குறிப்பிடப்படுகிறது. அதற்கு மேலதிகமாக இக்கதையின் ரடிக்கல் பிக்குமார் குழுவின் அரசியல்பற்றிய விமர்சனமும் முன்வைக்கப்பட்டுள்ளது. [இவருடைய சிறுதையின் ஆங்கில மொழிபெயர்ப்பை அடிக்குறிப்பில் உள்ள தகவல்கள் மூலம் காணலாம். ][29].

## 18. ஊடகவியலாளர் குசல் பெரேராவை கைதுசெய்வதற்கான முயற்சி

ஸ்தாபன ரீதியான புலனாய்வுப் பிரிவினால் ஊடகவியலாளர் குசல் பெரேரா மற்றும் அவரது கட்டுரையைப் பிரசுரித்த டெய்லிமிரர் பத்திரிகைக்கு எதிராக ஓர் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குசல் பெரேராவினால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் பின்னர் இலங்கையின் நிலைமைபற்றி "இஸ்லாம் பயங்கரவாகத்தில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட சிங்கள பௌத்த வன்முறைநோக்கி" ("From Islamic terrorism to marauding Sinhala Buddhist violence" என்னும் கட்டுரை மே 17 ஆந் திகதி டெய்லிமிரர் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டமையால் மதமோதல்கள் ஏற்படுவதற்கு காரணமாகிறது என்று வரைவிலக்கணம் கூறி, 2007 இன் 56 ஆம் இலக்க சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டத்தின்கீழ் (ICCPR) குசல் பெரேராவிற்கு எதிராக இவ்வாறாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதேசமயம் இது தொடர்பாக டெய்லிமிரர் பத்திரிகையின் ஆசிரியர் குழாமை கேள்விக்குட்படுத்தியிருந்தனர்[30].



*ஊடகவியலாளர் குசல் பெரேரா - படம் Sri Lanka Mirror இணையதளம்*

[29] Read the English translation of the story here http://www.jdslanka.org/index.php/analysis-reviews/poetry-a-prose/903-shakthika-sathkumara-shortstory-ardha

[30] https://www.srilankamirror.com/news/14490-senior-journalist-kusal-perera-under-threat

சுதந்திர ஊடக இயக்கம் இதுபற்றி ஓர் பத்திரிகை அறிவித்தலை வெளியிட்டிருந்தது. இது ஊடகச் சுதந்திரத்திற்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் பாரதூரமான அச்சுறுத்தலென இச்சட்டத்தின் கீழ் சட்டநடவடிக்கைகள் மூலம் பிணை வழங்கியதை மறுத்துரைப்பதாகும். மூத்த ஊடகவியலாளர் ஒருவரால் பத்திரிகை ஊடகத்திற்கு எழுதிய கட்டுரை தொடர்பாக இவ்வாறாக நடவடிக்கை எடுப்பது தீய முன்னுதாரணமாகும்[31].

ஊடக அமைப்புக்களும் சிவில்சமூக அமைப்புக்களும் கடுமையான எதிர்ப்புக்கள் காரணமாக இவ்விசாரணைகளை கைவிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது. குசல் பெரேரா ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடலின்போது அவர் கைதுசெய்யப்பட மாட்டாரென உறுதிமொழியளிக்கப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது[32]. பின்னர் இது சம்மந்தமாக அடிப்படை உரிமைகள் தொடர்பாக மனு ஒன்றும் குசல் பெரேராவினால் சமர்ப்பிக்கப்பட்டது[33].

## C. அடக்குமுறைச் சட்டங்கள்

### 19. ICCPR சட்டத்தைக் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்குப் பயன்படுத்துதல்

கடந்த மூன்றுமாத காலத்திற்குள், ஐ.சீ.சீ சட்டம் அல்லது 2007 இன் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தினதும் பேச்சுச் சுதந்திரத்தையும் ஒடுக்குவதற்கு துஷ்பிர26யோகம் செய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் குசல் பெரேராவை கைது செய்வதற்கான முயற்சிபற்றி சுதந்திர ஊடக இயக்கம் வெ ளியிட்ட கட்டுரையில் இப்போக்குபற்றி குறிப்பிட்டு கடுமையாக கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் ஏப்பிரல் மாதத்தின் ஆரம்பத்தில் சக்த்தி கசன் குமார இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்து தான்தோன்றித்தனமாக பிணை வழங்காமல் தொடர்ந்தும் தடுப்பிக் காவலில்வைக்கப்பட்டுள்ளார். இது தீங்கான முன்னுதாரணமாகும். சிறுபான்மை இனங்களைச் சார்ந்த நபர்களுக்கு எதிராக தொடர்ந்தும் இது துஷ்பிரயோகம் செய்யப்படுகிறதி. ஒரு சம்பவத்தின்போது முகநூல் சமூக ஊடகத்தில் “சிரிக்க வேண்டாம். குறிப்பிட்ட ஒரு நாளில் நீங்கள் அழவேண்டி ஏற்படலாம்’ (don't laugh more 1 day you will cry) என ஆங்கிலத்தில் எழுதிய ஒரு கருத்துரை தவறாக புரிந்துகொண்டதை அடிப்படையாகக் கொண்டு இனவாதக் குழும் ஒன்றினால் சிலாபத்தில் வசிக்கும் மொஹமட் ஹம்சா என்ற 38 வயதுடைய முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் வியாபார நிலையத்திற்கும் அதனை அண்மித்து அமைந்திருந்த முஸ்லிம் கடைகளும் தாக்கப்பட்டிருந்தன. எனவே இனங்களுக்கிடையில் ஐக்கியமின்மை தோன்றியுள்ளதெனக் கூறி ஒரு பாதிக்கப்பட்ட நபர் கைதுசெய்யப்பட்டார்[34]. மற்றுமொரு சம்பத்தின்போதி கப்பல் சுக்கானின் உருவங்களைக் கொண்ட ஆடைகளை அணிந்திருந்த அப்துல் ரஷீம் மாஷினால் என்ற பெண்மணி தர்ம சக்கரம் பொறித்த ஆடை

[31] http://srilankabrief.org/2019/06/sri-lanka-fmm-condemns-the-attempts-to-suppress-journalists-and-media-using-the-iccpr-act/
[32] https://english.theleader.lk/news/270-president-intervenes-in-case-against-journalist-kusal-claims-he-will-not-be-arrested , and Kusal Perera’s Tweet on 15 June 2019 10.29 pm https://twitter.com/Cokroach/status/1140129143809437697
[33] http://www.dailynews.lk/2019/07/08/law-order/190543/fr-filed-senior-journalist-kusal-perera-fixed-support
[34] http://www.dailynews.lk/2019/05/12/local/185314/fb-post-creates-tension-chilaw

அணிந்தி பௌத்த மத்தை அவமதித்தார் எனக்கூறி இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தான்தோன்றித்தனமாக தடுப்புக காவலில் வைக்கப்பட்டார் [35] . இதுதொடர்பாக அப்பெண்மணி அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

## 20. அவசரகாலச் சட்ட பிரகடனமும் உரிமைகளுக்கான மட்டுப்பாடும்

ஏப்பிரல் 21 ஆந் திகதி இடம்பெற்ற தீவிரவாத குண்டுத்தாக்குதலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் அவசரகாலச் சட்டத்தை செயற்படுத்தியதோடு அது, பாராளுமன்றத்தின் ஊடாக ஒருமாத காலத்திற்கு நீடிக்கப்பட்டதோடு தொடர்ந்தும் அமுலில் உள்ளது. 2019 யூன் மாம் 22 ஆந் திகதி முதல் அவசரகாலச் சட்டம் மீள ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டது[36 37].

தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டத்தின்கீழ் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் வேலை நிறுத்தம் 27 மேற்கொள்ளும் சுதந்திரம் என்பவற்றிற்கு பாரதூரமான மட்டுப்பாடுகள் விடுக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தின்கீழ் 'பயங்கரவாத நடவடிக்கைகள்' என வரைவிலக்கணம் செய்யப்பட்ட 'அத்தியாவசிய சேவைகள் அல்லது விநியோகங்கள் என்பவற்றிற்கு பாரதூரமான தடைகள் அல்லது பாதிப்புக்கள் ஏற்படுத்துதல்' என்பன உள்ளடக்கப்படுகின்றன. இவ்வத்தியாவசிய சேவைகள் என்ற வரைவிலக்கணத்திற்கு தொழிலாளர்களின் கூட்டங்கள், ஆர்ப்பாட்ட இயக்கங்கள் ஆகிய அனைத்து அரச எதிர்ப்பு நடவடிக்கைகளைப் போலவே பயங்கரவாத நடவடிக்கைகளாக வரைவிலக்கணம் செய்யும் ஓர் அச்சுறுத்தல் நிலவுகிறது. அத்தியாவசிய சேவைகளுக்கு போக்குவரத்துச்சேவை, மின்சாரம், எரிபொருள், தபால் மற்றும் தொலைதொடர்புச் சேவை வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சவைகள், அனைத்து அரச சேவைகள், தேயிலை தென்னை ரப்பர் பயிர்ச்செய்கையோடு தொடர்புடைய சேவைகள், ஆடைக் கைத்தொழிலோடு ஏற்புடைய சேவைகள் உட்பட மேலும் பல சேவைகள் உள்ளடக்கப்படுகின்றன. அத்தியாவசிய சேவைகளுக்கு ஏற்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடாமை அவற்றைத் தவிர்த்தல் அல்லது நிராகரித்தல், வேலை நிறுத்தத்திற்கு அல்லது வேறு ஸ்தாபன ரீதியான நடவடிக்கைகளுக்கு அனுசரணை வழங்குவதுமூலம் குற்றவாளிகளாகக் காணப்படும் இவர்களுக்கு சேவைகளை இல்லாதொழித்தல் மற்றும் கைது செய்தல் என்பவற்றிற்கான ஏற்பாடுகளும் அவசரகாலச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேசமயம் எந்தவொரு ஊடகத்தையும் மூடி விடுதல் தடைசெய்தல் மற்றும் வெகுஜன ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரம் உண்டு. அதேசமயம் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படும் ஒரு நபர் நீதவான் முன்னிலையில் ஆஜயர்படுத்தப்படாமல் 30 நாட்கள் வரை தடுப்புக்காவலில் வைத்துக்கொள்ள முடியும். பாதுகாப்புச் செயலாளரின்

[35] http://www.dailynews.lk/2019/06/15/law-order/188463/detained-woman-files-fr-plaint
[36] http://www.hirunews.lk/218867/emergency-regulations-extended-by-another-month (last access on 29th June 2019)
[37] Emergency Regulations http://www.documents.gov.lk/files/egz/2019/4/2120-05_E.pdf

கட்டளைப்படி ஒரு நபரை ஓராண்டுகாலம் வரை தடுத்துவைக்க முடியும். அதேசமயம் பொலிஸாருக்கு வழங்கப்படும் ஒப்தல் வாக்குமூலத்தை அடிப்படையாக்க் கொண்டு தண்டனை வழங்கும் ஆற்றல் அவசரகாலச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே ஆட்கள் சித்திரவதைக்கு ஆளாகும் பாரதூரமான அச்சுறுத்தல் அவசரகாலச் சட்டத்தை செயற்படுத்துகையில் உண்டு.

## 21. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை (CTA) மீண்டும்கொண்டு வருவதற்கான முயற்சி

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்ளை அடுத்து,முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துவேறுபாட்டிற்குக் காரணமான பயங்கரவாத எதிர்ப்பு தடைச் சட்டம் (CTA)மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பிரதமர் விசேட அறிக்கையை விடுத்து பாராளுமன்றத்தில் இச்சட்டத்தை அங்கீகரிப்பதற்கு ஆதரவை வேண்டினார். பாராளுமன்றக்குழு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார். [38] அதே சமயம் மே 8ந் திகதி (CTA)சட்டத்தை துரிதமாக அங்கீகரிப்பதற்கு பாராளுமன்றம் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் குறிப்பிட்டாரர்.

இக்கூற்றிற்கு பதிலளித்து உரையாற்றிய எதிர்க்க்கட்சித் தலைவர், அதற்கு இது உசிதமான தருணம் அல்ல எனக் கூறினார்.இத்தகைய சட்டம் மக்கள் போராட்டங்ளை ஒடுக்கும் என்ற காரணத்தினால் எத்கைய சூழலிலும் இதுகொண்டுவரக்கூடாது என ஜேவீபீ தலைவர் வலியுறுத்தினார். அதே சமயம் பாராளுமன்றத் துறைசார் குழுவில் இதுதொடர்பாக விசாரிக்கப்பட்டபோது, பொலிஸ் உத்தியோகத்தர்களும்,குற்றவியல் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரும் ,பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரும்,வெளிநாட்டு விவகார அமைச்சின் செயலாளரும்,சட்டமா அதிபரும் பயங்கரவாத்த்தை எதிர்ப்பதற்கு CTA சட்டம்கொண்டு வரவேண்டிய தேவையில்லை எனக்குறிப்பிட்டதாக பதைளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி வலியுறுத்தினார்.

இச்சட்ட மூலம் முதன் முதலாக 2018ல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டபோது சமூகச்செயற்பாட்டாளர்களும்,சிவில் சமூகக்குழுமங்களும்,தொழிற் சங்கங்களும் அரசியற் கட்சிகளும் கடுமையாக விமர்சித்தன.இச்சட்டம் தற்போது நடைமுறையில் இருக்கும் 1979இன் 48 ஆம்இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை (PTA) மாற்றீடு செய்யும் என அரசாங்கம் குறிப்பிடும்போது ,ஏற்கனவே (PTA) சட்.டத்தின்கீழ் தான்தோன்றித்தனமான கைதுகள்,தடுப்புக்காவலில்வைத்தல்,சித்திரவதைகள்,ஊடகவியலாளர்களுக்கும் மனித உரிமைக் காப்பாளர்களுக்கும் எதிரான ஒடுக்குமுறை என்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்களும் பரந்துபட்டமுறையில் விமர்சனங்களுக்காளாகியுள்ளன.ஏற்கனவே, CTA மூலம் அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் என்பதையும் சிவில் சமூகம் ஒடுக்கப்படும் என்பதையும் வலியுறுத்தி தேசிய சட்டத்.தரணிகள் சங்கங்களின் கூட்டமைப்பு, அனைத்துப்பல்லைக்கழக மாணவர் ஒன்றியம் (IUSF),ஊடகச் சுதந்திரத்திற்கான இயக்கம் (FMM) ஆகிய அமைப்புக்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

[38] http://www.pmoffice.gov.lk/download/press/D00000000080_EN.pdf

## D. பிற (ஏனையவை)

### 22. யாழ்.பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவரும் செயலாளரும் பொலிஸாரினால் கைது

யாழ்.பல்கலைக்கழக மாணவ சங்கத்தின் தலைவரும் செயலாளரும் மே மாதம் 03 ஆந் திகதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அன்று காலை சுமார் 4.00 மணிக்கு பொலிஸார் பல்கலைக்கழக மாணவர் விடுதியில் மேற்கொண்ட சோனையிடலின்போது யாழ்.பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவரும் செயலாளரும் தங்கியிருந்த விடுதியில் அறையில் இருந்த தொலைநோக்கு கருவியையும், பூட்ஸ் சோடியையும் இறந்த விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் சுவரொட்டி ஒன்றையும் கண்டுபிடித்தமையால் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என அறிக்கையிடப்பட்டுள்ளது.[39] இவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரணைக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட வேண்டுமென இலங்கைப் பொலிஸார் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளனர் என தமிழ் கார்டியன் இணையதளம் குறிப்பிடுகிறது.[40]

2019 மார்ச் மாதத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களுடன் ஒன்றிணைந்து தமிழ் மக்களைப் படுகொலை செய்தமை தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரியும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.[41] இக்கைதுகளின் பின்னர் தமிழ் கார்டியன் ஊடகத்திற்கு கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களின் அமைப்பு பின்வருமாறு வலியுறுத்தியது. இம்மாணவர்கள் ஒருசில மாதங்களுக்கு முன்னர் அரசியல் கைதிகளை விடுவிக்கும் நோக்கில் போராடியதாகவும், இவ்வாறு அவசரகாலச் சட்டத்தின்கீழ் இவர்களைக் கைதுசெய்வதாயின், இதுபோன்ற பிரச்சினைகளுக்காக குரல் எழுப்பிய தாம் உட்பட ஏனைய செயற்பாட்டாளர்கள் அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படுவதற்கான அபாய வாய்ப்பு உண்டென்பதை குறிப்பிட்டனர். இந்த மாணவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டதாக 029 மே 16 ஆந் திகதி டெய்லிநியூஸ் பத்திரிகை அறிக்கையிட்டது.[42]

---

[39] "Jaffna Uni Students Union President, secretary arrested with Prabha posters" 4th May 2019, Daily Mirror (last accessed on 29th June 2019) http://www.dailymirror.lk/front_page/Jaffna-Uni-Students-Union-President--secretary-arrested-with-Prabha-posters/238-166440

[40] "Sri Lankan police seek PTA powers for arrested students" 4th May 2019, Tamil Guardian. (last accessed on 29th June 2019) https://www.tamilguardian.com/content/sri-lankan-police-seek-pta-powers-arrested-students

[41] "Jaffna uni students demand Sri Lanka be referred to ICC for genocide".22nd March 2019. Tamil Guardian. https://www.tamilguardian.com/content/jaffna-uni-students-demand-sri-lanka-be-referred-icc-genocide

[42] "Jaffna University students' union president and secretary released on bail". 16th May 2019, Daily News. (Last accessed on 5th July, 2019) http://www.dailynews.lk/2019/05/16/law-order/185803/jaffna-university-students'-union-president-and-secretary-released-bail

### 23. மஹா நாயக்க தேரரின் பகைமை உணர்ச்சியைத் தூண்டக்கூடிய கூற்றுக்கள் தொடர்பாக முறைப்பாடு செய்த கலாநிதி சரவணமுத்துவிற்கு எதிராக பிக்குமாரின் முறைப்பாடு

கலாநிதி சரவணமுத்துவினால் குறித்த மகாநாயக்க தேரருக்கு எதிராக பின்வரும் கூற்றை முன்வைத்து முறைப்பாடு செய்யப்பட்டது. சிசேரியன் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் வேளையில், குறிப்பிட்ட பெண்களின் விருப்பத்தைப் பெறாமல், மலட்டுத்தன்மை ஏற்படக்கூடிய சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டதாக குற்றச்சாட்டுக்கள் சாட்டடப்பட்ட வைத்தியருக்கு கல்லெறிய வேண்டுமெனவும், முஸ்லிம் கடைகளில் இருந்து உணவு பெறுவதன்மூலம் மலட்டுத்தன்மை ஏற்படலாமெனவும் மேற்படி பிக்கு குறிப்பிட்டார்.

கலாநிதி சரவணமுத்துவிற்கு எதிராக முறைப்பாட்டைச் செய்த சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பௌத்த தகவல் நிலையத்தின் அங்குலுகல்லே ஜினானந்த தேர் இவ்வாறு குறிப்பிட்டார். ஜனாதிபதிக்கும் அதிகாரிகளுக்கும் ஒன்று கூறுவேன். இந்த என்ஜீஓ கும்பல்களை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும். வெளிநாட்டுப் பணத்தின்மூலம் இந்த நாட்டைச் சீரழிக்கும் இப்பிரிவினரை இலங்கையில் இருந்து விரட்டியடிக்க வேண்டும். அதேசமயம் பாக்கியசோதி சரவணமுத்து பரப்பிவரும் இந்த இனவாதப் பிரகடனங்களுக்கு எதிராக 2007 இன் 56 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தொடருமாறும் சட்டத்தை அமுல்படுத்துமாறும் நாம் பொலிஸ் மா அதிபருக்கு காரண காரியங்களோடு முறைப்பாட்டையும் மேற்கொண்டோம்”[43] இதுபற்றி கருத்துத் தெரிவித்த 'சிஹல ராவய' என்ற ரடிக்கல் பௌத்த அமைப்பின் தவிசாளரான, முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரர் பின்வருமாறு குறிப்பிட்டார். 'இந்நாட்டில் எவருமே மகாநாயக்க தேரர்களுக்கு எதிராக சவால் விடுக்கவில்லை. எனவே ,இச்செயல் சர்வதேசம் விடுக்கும் ஒரு சவாலாகவே கருதவேண்டி உள்ளது.

சிங்களப்பெண்களை மலடாக்கியதாக இனரீதியாக குற்றம் சுமத்தப்பட்டு, கைது செய்யப்பட்ட , குருநாலை அரசாங்க வைத்தியசாலையில் பணியாற்றிய சாஃபி சஹப்தீன் என்ற முஸ்லீம் மருத்துவர் தொடர்பாக, மஹாநாயக்க தேரர் கருத்துரை தெரிவித்திருந்தார்.சிங்களப்பெண்களின் சம்மதம் இன்றி பிரசவ சத்திரசிகிச்கை (Cesarean)பிரிவில் சத்திர சிகிச்சை மேற்கொண்டதாக , தேசியவாதப் பத்திரிகையொன்று ஒரு கட்டுரையைப் பிரசுரித்த பின்னர்,மேற்படி முஸ்லீம் மருத்துவர் கைதுசெய்யப்பட்டார்.சட்டவிரோதமான முறையிலும் ஐயப்பாடான வகையிலும்சொத்துக்ளைத் திரட்டினார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது சுமத்தப்பட்டது.மேற்படி குற்றச் சாட்டுக்களுக்கான சான்றாதாரங்கள் இல்லை என பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவு (CID) நீதிமன்றத்தில் அறிவித்தது. [44].

[43] අන්තවාදී ප්‍රකාශයන්ට එරෙහිව පාක්‍යසෝති සරවනමුත්තුට එරෙහිව පැමිණිල්ලක්... https://youtu.be/AMA1nbeN68M
[44] CID informs Court no evidence found for all allegations against Dr. Shafi Shihabdeen http://www.ft.lk/front-page/CID-informs-Court-no-evidence-found-for-all-allegations-against-Dr--Shafi-Shihabdeen/44-680838 accessed on 20th August 2019

## 24. பொலிஸ் உத்தியோகத்தரை ஒருபௌத்த பிக்கு மிரட்டினார்

ஒரு முஸ்லீம் வைத்தியருக்கு எதிராக இனரீதியாக ஒத்துழைப்பு வழங்கவில்லை எனக்கூறி, சீ.ஐ.டீ.பொலிஸ் உத்தியோகத்தரை ஒரு நீதவான் நீதிமன்றில் ஒருபௌத்த பிக்குவான பா.உ. வண. அத்துரலியே ரத்தனதேரர் மிரட்டினார். ( முன்னைய சம்பவத்தின் கடைசிப் பந்தியில் இச்சம்பவம் குறித்தரைக்கப்படுகின்றது ). சாஃபி சஹப்தீன் என்ற முஸ்லீம் மருத்துவர் தொடர்பாக சீ.ஐ.டீ. உதவிப்பொலிஸ் அத்யட்சகர் பீ.எஸ்.திசேரா குருநாலை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பணம் செய்துகொண்டிருந்தார்.நீதிமன்ற இடைவேளையின்போது, பௌத்த பிக்குவான பா.உ. வண. அத்துரலியே ரத்தனதேரர் உதவிப்பொலிஸ் அத்யட்சகர் பீ.எஸ்.திசேரவை நெருங்கி அவரது தோளில் தட்டி மிரட்டினார். திசேரா தேரருக்கு வணக்கஞ்செலுத்தினார்.அப்போது தேரர் தனது ஆள்காட்டி விரலைக் காட்டி அவரை அச்சுறுத்தி பின்வருமாறு கூறினார். “நாங்கள் பார்ப்போம்.முழு உ லகமும் இதை பார்த்துக்கொண்டிருக்கிறது.” யூன் 27ஆந் திகதி பகிரங்க நீதிமன்றத்திலயே இவ்வாறு கூறப்பட்டது.அதேநாள் நீதிமன்றத்திற்கு வெளியேயும் திசேராவுக்கு எதிராக இத்தகைய கடுஞ்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுதொடர்பாக இரண்டு தொலைக்காட்சி நிலையங்களில் இருந்து பதியப்படாத வீடியோக்களை எடுப்தற்கு சீ.ஐ.டீ. நீதிமன்றக் கட்டளையைப்பெற்றுள்ளது.அடுத்த நீதிமன்ற அமர்வில் இவை நீதவான் நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்படும்.[45].

## 25.அகதிகளும் மனித உரிமைக் காவலர்களும் மனித உரிமைப்பாதுகாப்பு அமைப்புக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கும் (UNHCR) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தின் கீழ் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையில் தஞ்சம்கோரியோரும் அகதிகளும் இங்கு தங்கவைக்கப்பட்டிருந்தனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர், இவர்கள் தமது வீடுகளில் இருந்தும் தங்குமிடங்களில் இருந்தும் பலவந்தமாகளயேற்றப்பட்டனர். சிலர் அச்சுறுத்தல்ளையும் பௌதீக வன்முறைகளையும் எதிர்நோக்கினர். பயங்கரவாத சந்தேகநபர்களாக அவர்களை அடையாளப்படுத்த சிலர் முயற்சித்ததாக INFORM அவதானித்தது. இச்சூழமைவின் கீழ் தஞ்சம்கோரியோரையும் அகதிகளையம் பாதுகாக்க முன்வந்த மனித உரிமைக் காவலர்களும் மனித உரிமைப்பாதுகாப்பு அமைப்புக்களும் பலவேறு தொந்தரவுகளையம் தாக்குதல்ளையும் எதிர்நோக்கநேர்ந்த்து.அலுவலகங்களுக்கு வெளியே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கும் சுற்றி வளைப்புகளும் இடம்பெற்றன.

[45] CID under siege http://www.sundayobserver.lk/2019/08/04/news-features/cid-under-siege